
# சாளரம்

□ இளையோர் திங்கள் இதழ் □ மார்ச்—ஏப்ரல் 1993 □ விலை 12 ரூபா



'தமிழோசை' ஒளிநாடா திரைப்படம்

**தரமான பொருளைத்தேடி அலைந்து**

**தரமான நேரத்தை வீணாக்காதீர்கள்**

தரம் இங்கே உள்ளது

**நாட்டரிசி தரம் I தரம் II தரம் III**

**சம்பா அரிசி தரம் I தரம் II தரம் III**

**உடைத்த பச்சை அரிசி**

**தீட்டுப்பச்சை அரிசி**

இவற்றின்

மொத்த விற்பனையாளர்கள்

# ஏ. கே. எஸ். அரிசி ஆலை

**யாழ் வீதி - கிளிநொச்சி**

சாளரம்

கதவு 3 (17) - காற்றலை 2

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-2-3-1993
யாழ்ப்பாணம்

# ஆசிரியர்களின் திறனும், நலனும்

இலங்கைத் தீவில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக பல திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கல்வித்துறையில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக இத்தீவு விளங்குகின்றது.

1944 ம் ஆண்டு சி. டபிள்யூ கன்னங்கரா இலவச கல்வித்திட்டத்தை கொண்டு வந்தார். 1978 இல் இருந்து மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள் வழங்கப்படுகின்றன.

1989 ல் இருந்து இலவச மதியஉணவும், 1993 இல் இருந்து இலவச சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

இதேவேளை பாடசாலைகள் கட்டிடங்கள் இன்றி, தளபாடங்கள் இன்றி முக்கியமாக ஆசிரியர் வளம் இன்றி இருக்கின்றன.

தமிழீழத்தில் பல பாடசாலைகள் ஏதிலிகள்தங்ககங்களாக இருக்கின்றன. பல பாடசாலைகள் சிறிலங்காவின் வான்படையின் குண்டுவீச்சால் அழிக்கப்பட்டுள்ளன.

கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்களின் தரம், நலன் என்பவை முதன்மைபாகக் கவனிக்கப்படவேண்டும்.

ஆசிரியர் சேவை என்பது சமூகத்தில் மரியாதைக்குரிய முதன்மை சேவையாக கருதப்படவேண்டும். அது ஒரு இழிந்தசேவையாக கருதப்படக்கூடாது.

இன்றைய உலகில் முதன்மை நிலையை தீர்மானிப்பதில் பொருளாதாரம் முக்கிய பங்கை வகிக்கின்றது.

கல்வியின் தரத்தை மேம்படுத்த ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். அதேவேளை அவர்களின் பொருளாதார நிலையும் சமூகத்தில் முதன்மை நிலையை பெறும் வகையில் இருக்கவேண்டும்.

கல்வியின் தரத்தை உயர்த்த முயல்வோர், மாணவர்களின் நலன்களில் அக்கறை காட்டுவோர் முக்கியமாக ஆசிரியர்களின் திறன், நலனில் முதலில் கவனம் எடுக்க வேண்டும்.

## இந்த இதழில்...

☐ ஆசிரியர் தலையங்கம்
☐ கவிதை
☐ சிறப்புச் சித்திபெற்ற மாணவர்களுடன் ஓர் சந்திப்பு
☐ 'தமிழோசை'
☐ பதவிக்கு வரும் அரசும் பாழ்படும் விளை நிலமும்
☐ தமிழீழத்தின் மக்கள் தொகை
☐ மன்னார் மாவட்டத்தின் கல்வி நிலை - ஒரு நோக்கு
☐ இலக்கியச் சொல்லின்பம்
☐ கனினிகளும் மம்மிகளும்
☐ அடுப்புக்குள் வேகும் நிலை மாற்ற ...
☐ பாடசாலைகளில் கடல்வளம் சார் கல்வி
☐ களங்களை வென்ற வேகத்தில் மனங்களை வென்றாய்!
☐ மாணவர்கள் தனிக்கல்வியுடன் ஒதுங்கிவிடக்கூடாது
☐ அச்சமூட்டும் அளவில் மீண்டும் மலேரியா பரவுகிறது
☐ உளவியல் உலகம்
☐ அரும்புகள்
☐ தெறிப்பு

முக்கி முக்கி உழக்குகிறான்
முத்து வேலன் சயிக்கிலிலே
உக்கலான பலாக்கட்டை
உழுத்துப் போன மரவேர்கள்
முன்னால் இரண்டு மரக்குற்றி
பின்னால் இரண்டு தடிக்கட்டு
மூச்சைப் பிடித்து உழக்குகிறான்
முத்துவேலன் சயிக்கிலிலே.



# விறகுக் காரன்

பச்சைக் கோம்பைச் சாக்கிரண்டு
பக்கத்திலே தூங்குதடா
முகத்தில் அரும்பும் வியர்வைத்துளி
முதுகின் பின்னால் பாதணிகள்
விறகுக்கட்டுள் கோடாலி
அதற்கு மேலே நீர்த்தாங்கி
கோடை வெயிலாய் எரிக்கிறதே
கோரப் பசியும் கூடுகுதே

பச்சைக் குழந்தைக்குப் பாலில்லையா
பாட்டி செத்துப் போனாளா
எரிபொருள் இல்லாப் பிரச்சினையால்
உந்தன் வயிறும் எரிகிறதா?
மூசி, மூசி ஓடுகிறான்
முத்து வேலன் சயிக்கிலிலே

தம்பி உந்தன் அவசரங்கள்
எல்லாம் எமக்குப் புரிகிறதே
உன்னைப் போல பிரச்சினைகள்
எல்லாம் உள்ளவர் பலபேர்கள்

நாடே பற்றி எரிகிறதே
நாமோ போரில் வாழுகிறோம்
காடே எங்கள் வளமெல்லாம்
மரங்கள் நாட்டி வாழ்த்துகிறோம்
நீயோ காட்டை வெட்டுகிறாய்

அளவாய் விறகை வெட்டப்பா
அன்பாய் உன்னைக் கேட்கின்றோம்
பாதசாரிகள் செல்வதற்குப்
பாதை விட்டுச் செல்லப்பா
போரில் வீரர் செல்லுகிறார்
சற்றே விலகி நில்லப்பா

முக்கி முக்கி உழக்குகிறான்
முத்து வேலன் சயிக்கிலிலே.

மட்டுவில் சி. சதாசிவம்

## மறக்க முடியாத 969 நாட்கள்

30-7-87 ல் தமிழீழத்திற்கு வந்த இந்திய வன்கவர்வுப் படையால் 6000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

24-3-90 இந்திய வன்கவர்வுப் படை தமிழீழத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. 10-10-87 வெடித்த தமிழீழ இந்தியப்போர் 20-9-89 அன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதலை இந்திய அரசு நிறுத்துவதாக அறிவித்த பின்பும் தொடர்ந்தது.

## மூன்றாம் மனிதரை வாழ்விக்கும் நல்ல இதயம்

சுவிற்சலாந்தில் சூரிச் பல்கலைக்கழக மருத்துவ மனையில் 47 வயதுடைய ஒருவருக்கு 20 வயதில் தற்கொலை செய்த ஒருவரின் இதயம் முதலில் மாற்றப்பட்டது. ஆனால் அவர் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு காரணமாக நான்கு நாளில் இறந்தார். அவருக்கு மாற்றப்பட்ட இதயம் 58 வயதுடைய நான்கு முறை இதய அதிர்ச்சி வந்த ஒருவருக்கு மாற்றப்பட்டது. அவர் சுகமாக இருக்கின்றார்.

**1992** ஆகஸ்ட் திங்கள் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் யாழ். குடாநாட்டில் மொத்தம் பதினொரு மாணவர்கள் நான்கு பாடங்களில் சிறப்பு சித்தியெய்தியுள்ளனர். (4 A)

யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த குணரத்தினம் ஞானரஞ்சன், மகாலிங்கம் சிறீகரன், (பொறியியல்) கதிர்காமநாதன் கேந்திரன். (வர்த்தகம்) சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த லோகேஸ்வரன் சேகரன், சிவபாதலிங்கம் சிவவாகீசர், (பொறியியல்) யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்த கனகலிங்கம் கிருஷ்ண குமார் (வர்த்தகம்) பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் தயாபரன், நடராசா கணநாதன் (பொறியியல்) வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுதா தாமோதரம்பிள்ளை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தாரகா டானியல், கனகரத்தினம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜ. யூட்கிறேசியன் (வர்த்தகம்) ஆகியோரே இவர்கள்.

# சிறப்பு சித்திபெற்ற மாணவர்களுடன் ஓர் சந்திப்பு

போர்ச்சூழல், பொருளாதாரத்தடை இவற்றினோடு பின்னிப் பிணைந்துள்ள பலவிதமான பிரச்சினைகள், நெருக்கடிகள் மத்தியில் இம்மாணவர்களின் ஆற்றல் ஒரு சாதனை என்றே கூறலாம். இவர்கள் அனைவரையும் சந்தித்து சாளரம் சார்பில் உரையாட எண்ணினோம். கேந்திரன், யூட்கிறேசியன், சேகரன், சிவவாகீசர், கிருஸ்ணகுமார் ஆகியோர் எமது அழைப்பிற்கிணங்கி சாளரம் செயலகத்திற்கு வருகை தந்து உரையாடினார்கள்.

மேற்படி மாணவர்களிடம் உரையாடிய போது பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியாகின.

- குடாநாட்டைச் சூழ்ந்துள்ள போர் அச்சுறுத்தல்கள் - அவ்வப்போது இடம் பெறும் ஏவுகணை, வானூர்தித் தாக்குதல்கள் - பாடசாலைகள் மீதான தாக்குதல்கள் - படையினர் ஆக்கிரமிப்பால்ஏற்படும் இடம் பெயர்வுகள் - பொருளாதாரத் தடையினால் ஏற்பட்டுள்ள இன்னல்கள். மின்சாரமில்லாத வேளை குப்பி விளக்கில் படிப்பதற்குக் கூட முடியாத நிலையில் மண்ணெய் தட்டுப்பாடு - இன்னோரன்ன சிக்கல்கள் மத்தியில் எவ்வாறு படித்து சிறப்பு சித்தியெய்த முடிந்தது?
- இச்சித்திக்கு பாடசாலையா, தனியார் கல்வி நிறுவனங்களா முக்கிய காரணம்?
- மாணவர்கள் பாடசாலைக் கல்வியில் மட்டுமே தங்கள் முழுநேரத்தையும், திறமையையும் பயன்படுத்த வேண்டும். சமூகப்பணி, கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற துறைகளில் மாணவர்கள் ஈடுபட்டால் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்கிற சிலரின் கருத்து பற்றி - அவர்களிடம் கேள்விகள் தொடுத்தோம்.

செல்வன் லோ. சேகரன் கூறியபோது—

தான் படிப்பில் கவனம் செலுத்திபதோடு லியோ கிளப்பில் இணைந்து பல சமூகப் பணிகளும் ஆற்றியுள்ளதாகக் கூறினார். தனக்கு வெளிநாடு சென்று கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்தால் மீண்டும் இங்கேயே திரும்பி வந்து சேவைபுரிய விரும்புவதாகவும் கூறினார்.

செல்வன் க. கேந்திரன் கூறும் போது—

வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டால் கல்வியில் முனைப்பு செலுத்த முடியாது என்று சில மாணவர்களும், பெற்றோரும், ஆசிரியர்களும் கருதுவதை இவர் ஏற்க மறுத்தார். இவர் பத்திரிகை சஞ்சிகைகளுக்கு கவிதைகள் எழுதிவருகிறார். தான் கலை, பண்பாட்டுக் கழகத்துடன் இணைந்து சுமார் பதினைந்து தெருக்கூத்துக்களில் பங்குகொண்டதாகவும் கிட்டத்தட்ட நூறு தடவைகள் இவை நடாத்தப்பட்டதாகவும் கூறினார். நாயன்மார்கட்டு சன சமூக நிலையத்தின் தலைவராக இருந்து பணிகள் செய்வதாகவும், இந்திரன் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் ஆசிரியராக சேவை செய்வதாகவும் இவர் கூறினார்.

செல்வன் சிவவாகீசர் சொல்கையில்—

தனது மூன்று சகோதரர்கள் பட்டதாரிகள் எனவும், தந்தை பாடசாலை அதிபராக கடமையாற்றுவதாகவும் தெரிவித்தார். இச்சூழல் இயல்பாகவே தம்மை கல்வியில் முனைப்புப்பெறவைத்தது எனவும் அவர் சொன்னார். 'இன்டறெக்ட்', 'றோட்டறெக்ட்' போன்ற கழகங்களில் அங்கத்தவராக தாம் இருப்பதாகவும் உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

செல்வன் க. கிருஸ்ணகுமார் கூறுகையில்—

தான் சாரணனாக இருப்பதாகவும், உதைபந்தாட்டம் போன்றவற்றில் ஈடுபடுள்ளதாகவும் சொன்னார்.

''பாடசாலைக் கல்வி தவிர்ந்த வேறு பணிகளில் ஈடுபடுவதால் கல்வி சீர்குலையலாம் என்கிற கருத்து முற்றிலும் பொய்யானது. எல்லாவற்றிற்கும் நேரத்தை ஒதுக்கி அவ்வவ் துறைகளில் முனைப்புப் பெற முடியும். ஒன்றிலேயே மூழ்கிப்போய் மற்றையதை கைவிடுவது என்பது போதைவஸ்துக்கு அடிமையாவதைப் போன்றது'' இவ்வாறு அவர் கருத்துத் தெரிவித்தார். நாடக அரங்கக் கல்லூரியினரோடு தொடர்பு கொண்டு தாம் நாடகத்துறையில் ஈடுபட்டுவருவதாகவும், தமிழ் மன்றத்தலைவராக இருப்பதாகவும், பேச்சு, கட்டுரைப்போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில்கள் பெற்றுள்ளதாகவும் இவர் தெரிவித்தார். ஆனையிறவு சமரின்போது இவர் சாரணராக அங்கு சென்று பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செல்வன் யூட் கிறேசியன்

தான் மூன்றுமாதமளவிலேயே 'ரியூசன்' சென்றதாகவும் தனது பாடசாலையான கனகரத்தினம் மத்திய ம வி இல் கற்ற கல்வியே தனது இச்சிறப்புச் சித்திக்குக்காரணம் எனவும் கூறினார். தனது பாடசாலையில் உள்ள திறமையான ஆசிரியர்களின் பங்கு தனது சித்திக்கு முக்கிய காரணமென சொன்ன யூட்கிறேசியன் உதைபந்தாட்டத்தில் சட்டனாகவும் உள்ளார். 'இன்டரெக்ட்' கழகம், 'ஏ. எல். யூனியன்' 'கிறிஸ்ரியன் யூனியன்' 'சென் றோக்ஸ் கிளப்' ஆகியவற்றில் இணைந்து பணியாற்றியுள்ளதாகவும் தெரிவித்தார். இவர் குருநகரைச் சேர்ந்தவராதலால், கரையோர கடற்படையினரின் அச்சுறுத்தல்களிற்கு தமது வீடு இலக்கானதாகவும், படிக்கும்போதே சிலசமயங்களில் தனது உறவினரோடு கடற்றொழிலுக்கு செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக இவர்கள் அனைவரும் தெரிவித்த கருத்துக்களிலிருந்து பலவித இடையூறுகளின் இடையிலும் சளைக்காது கல்வியில் கவனம் செலுத்தியமை தெரியவந்தது.

நீண்டகால நோக்கில் தனியார் கல்விநிறுவனங்கள் தீமைபயப்பனவாக இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் அவற்றின் உதவி அவசியமானது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

பல பட்டதாரி ஆசிரியர்கள் பாடசாலைகளில் இருப்பினும் தனியார்கல்வி நிறுவனங்களில் பட்டதாரி அல்லாதவர்கள் கற்பித்தலில் திறமையானவர்களாக உள்ளதாகவும், இதற்கு 'சாரணம்' கற்பித்தல் கலை (Art of teaching) எல்லோருக்கும் ஒரேமாதிரியாக வருவதில்லை. இதுவும் மாணவர்கள் தனியார்கல்வியை நாடுவதற்கு காரணமாக அமைகிறது. சில பாடசாலை ஆசிரியர்கள் 'ரியூசன்' வகுப்பும் நடாத்துகின்றனர். பாடசாலையில் கற்பித்துவிட்டு ''மேலதிகமாக விளங்கப்படுத்தவேண்டுமெனில் ரியூசனுக்கு வா'' என்று சொல்கிற நிலமையும் உண்டு. அப்படி ரியூசனுக்கு செல்லும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் தனியான கவனிப்புகளும் உண்டு. அதேநேரம், பாடசாலையில் தம்மிடம் படிக்கும் மாணவர்கள் தமது ரியூசன் வகுப்புகளுக்கு வரக்கூடாது என நேர்மையுடன் கூறி கற்பிக்கும் ஆசிரியர்களும் இருக்கின்றனர்.

இவ்வாறான விடயங்களும் உரையாடலின்போது இம் மாணவர்களால் தெரிவிக்கப்பட்டன.

தாங்கள் வெளிநாடு சென்று கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அங்கு பெற்ற மேலதிக கல்வியுடன் தாய் நாட்டிற்கே திரும்பிவந்து சேவை செய்ய விரும்புவதாக இந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சிக்குச் சென்று ஹாட்லிகல்லூரி மாணவர்களான த. தயாபரன், ந. கணநாதன் ஆகியோரை அவர்கள் வீடுகளில் சந்தித்தோம். செல்வன் தயாபரனோடு உரையாடுகையில் ஒவ்வொருநாளும் தான் படித்தபாடங்களை அந்தந்த நாளிலேயே மீட்டுப்பார்க்கும் பழக்கம் தம்மிடமுள்ளதாகவும் இதுவே தாம் சிறப்பு சித்திபெய்த காரணமெனவும் கூறினார்.

செல்வன் ந. கணநாதன் சொல்லும்போது —

தனது பாடசாலை தொடர்ந்து நடைபெறாத காரணத்தினால் தான் தனியார் கல்வி நிலையத்திலேயே கல்வி கற்றதாகவும் தெரிவித்தார்.

அடுத்ததாக மீசாலைக்குச் சென்று செல்வி சுதா தாமோதரம்பிள்ளையை சந்தித்தோம். இவர் பல நூல்களை வாசிக்கும் பழக்கமுள்ளவர். இசைத்துறையில் நாட்டமுள்ளவர். தென்மராட்சி கலை,பண்பாட்டுக்கழகத்துடன் இணைந்து தியாகதீபம் என்ற நிகழ்வை சென்ற ஆண்டு நிகழ்த்தியுள்ளார். ''ஒருபாடத்தையோ புத்தகத்தையோ படிப்பதால் மட்டும் பெரிய அளவில் பலன் கிட்டப்போவதில்லை. எனது ஆற்றலை வேறு வகைகளிலும் பயன்படுத்தி வருகிறேன்.''என்று கூறும் இவர்–

''தமிழீழ மக்களின் மனவுறுதியைக் குலைத்து எதிர்கால கல்விவளத்தைச் சிதைத்துவிடலாம் என எதிரி எண்ணுகிறான். அவனின் எண்ணம் தவறானது. எந்த இடர்பாட்டையும் கடந்து வளரக்கூடிய ஆற்றல் எம்மிடமுண்டு'' என்று குறிப்பிட்டார். ☐

## கலைக்கப்படும் மாநில அரசுகள்

அரசியல் அமைப்புச்சட்டம் 356வது பிரிவை பயன்படுத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை இதுவரை 86 முறை இந்திய நடுவன் அரசு கலைத்திருக்கின்றது.

# 'தமிழோசை'

## முல்லைத்தீவு கலைஞர்களால் உருவாக்கப்பட்ட

## ஒளிநாடா திரைப்படம்

முல்லைத்தீவிலிருந்து 'தமிழோசை' என்ற 'வீடியோத் திரைப்படமொன்று வெளிவந்துள்ளது. இப்படம் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக செட்போர் கூடத்தில் முதலில் கலைஞர்களுக்கும் இலக்கிய கர்த்தாக்களுக்கும் காட்டப்பட்டது. பின்னர் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இதற்கான வெளியீட்டு விழாவும் நிகழ்த்தப்பட்டு இறுதி நிகழ்வாக படமும் காண்பிக்கப்பட்டது,

சிங்கள இராணுவத்தால் சூழப்பட்ட தமிழ் கிராமமொன்றின் சோகமும், அம்மக்களின் அன்றாட அவலங்களுமே, இப்படத்தின் கதை. சிங்கள இராணுவக்குண்டர்களும் அவர்களிற்குத் துணைபோகும் தமிழ் துரோகக் கும்பல்களும், துயர்சுமந்தும், உறுதிதளராது நிற்கும் மக்களுமே இப்படத்தின் பாத்திரங்கள்.

வெறும் வர்த்தக நோக்குடன் பொழுது போக்கிற்காக தயாரிக்கப்படும் சாதாரண திரைப்படங்களிலிருந்து விடுபட்டு பார்ப்போரின் உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்யும் விதமாக இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப வசதிகளற்ற முல்லை மாவட்டத்தில், அங்குள்ள கலைஞர்களால் நடிக்கப்பட்டு, அங்கேயே முழுமையாக படப்பிடிப்பும் நிகழ்த்தப்பட்டு வெளிவந்துள்ள இப்படமானது சிறப்பான தாகவும், வித்தியாசமானதாகவும், எமக்குள் நாம் திருப்திகொள்ளும் வகையிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலரால் இத்திரைப்படம் பாராட்டப் பெற்றதோடு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் இத்திரைப்படத்தின் இயக்குனர் நடிகர்கள் உட்பட, இப்படத்தின் உருவாக்கத்தில் பங்கு கொண்ட அனைத்துக் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டதோடு அவரால் நேரடியாக பரிசில்களும் வழங்கப்பட்டமை முக்கியமானதொரு நிகழ்வாகும்.

கதை, வசனம் என்பவற்றை எழுதி இப்படத்தை இயக்கியுள்ள இயக்குனர் தாசன் அவர்களை சாளரம் சார்பில் சந்தித்தோம். இவரின் முழுப்பெயர் பொனியன் முருகதாசன். வயது முப்பது. பிறந்தது வாழைச்சேனையில். வசிப்பது முல்லை மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பில்.

● 'தமிழோசை' திரைப்படத்தின் படப்பிடிப்பு மற்றும் காட்சியமைப்புக்களைப் பார்க்கும்போது, அனுபவம் வாய்ந்த திரைப்பட இயக்குனர் ஒருவரால் எடுக்கப்பட்ட படம் போலவே தோன்றுகிறது. இத்துறையில் உங்களுக்கு முன்னனுபவம் ஏதேனும் உண்டா?

அனுபவம் என குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக எதுவும் இல்லை. ஏராளமான திரைப்படங்களைப்



இயக்குனர் தலைவர் பிரபாகரனிடம் பரிசு பெறுகிறார்.

பார்த்திருக்கிறேன். இயல்பாகவே ஓர் ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. இதனடிப்படையில் இப்படம் எடுக்கும் முன்னரே இரண்டு படங்கள் எடுத்துள்ளேன். 87ம் ஆண்டு 'இதயத்தில் இவர்கள்' என்ற பெயரில் ஒரு படமும் 89ம் ஆண்டு 'வழ்த்துங்கள்' என்ற பெயரில் ஒரு படமும் இயக்கினேன். இப்படங்களுக்கு கதைவசனம் எழுதி இயக்கியதோடல்லாமல் நானே நடிக்கவும் செய்தேன் இவ்விரண்டு படங்களும் திருப்திகரமானவையாக இல்லாமல் போனதுடன் மிகவும் தோல்வியானவையாகவும் முடிந்தன.

● 'தமிழோசை' திருப்தியை தந்துள்ளதா?

படப்பிடிப்பு. படத்தொகுப்பு இரண்டும் ஒருபடத்தின் வெற்றிக்கு முக்கிய காரணிகளாக இருக்கின்றன. இவை இப்படத்தில் எழுபது வீதம் சரியாக வந்துள்ளது இன்னும் முப்பது வீதம் செய்யலாம். சரியான தொழில் நுட்ப வசதிகள் எம்மிடம் இல்லாமை இதற்கு காரணம் எல்லா விடயங்களையும் ஒப்பிட்டு நாககுகையில் இப்படம் எனக்கு திருப்திகரமானதாகவுள்ளது.

● முன்னைய இருபடங்களைப் போல இப்படமும் தோல்வியடையாமல் இருக்க வேண்டுமென்பதற்காக என்ன முயற்சிகள் எடுத்தீர்கள்?

முன்னைய இருபடங்களிலும் காணப்பட்ட தவறுகள் நான் இப்படத்தை நல்ல முறையில் இயக்கக் காரணமாகஅமைந்தது அவற்றில் இடம்பெற்ற பல தவறுகள் இந்தப் படத்தில் இடம் பெறாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டேன். மேலும், போராளிகள் தரப்பில் நிறைய உதவிகள் இம்முறை எனக்குக் கிடைத்தன. சிங்கள இராணுவமாக நடிப்பதற்கு போராளிகளே முன்வந்து உதவினர். வாகனங்கள் தந்தும் உதவி செய்தனர். திரைப்படம் தயாரிப்பது பற்றிய நூல் ஒன்றினை கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தந்துதவினார். 'அக்கிரகாரத்தில கழுதை' என்றொரு புத்தகத்தை கவிஞர் நாவண்ணன் தந்தார். இவை இரண்டு நூல்களும் இத்திரைப் படத்தை நான் நல்ல முறையில் இயக்க உதவி புரிந்தன.

● இப்படத்திற்கு இவ்வாறான தோர் கதையை எழுத என்ன காரணம்?

எமது முல்லை மாவட்டத்தில் 1991ம் ஆண்டு மவீரர் தினம் கொண்டாட மக்கள் மத்தியில் மிகுந்த அச்சம் நிலவியது அந் நிகழ்வுகளின் போது அப்பகுதிகளில திட்டமிட்டு வானூர்தித் தாக்குதல்கள் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்பு 92ம் ஆண்டு துணிவுடனும், உறுதியுடனும் மக்கள் மாவீரர் தினத்தை சோலைகள், அலங்கார வளைவுகள், என்பனவற்றுடன் கொண்டாடினர். இப் படத்தின் கதையின் நான் சொல்லியிருப்பது எல்லோரும் ஒருமித்து, உறுதியுடன் இருந்தால் எதிரியினால் எம்மை, எம் உறுதியை எதுவும் செய்ய முடியாது என்ற கருத்தினைத்தான்.

□ தோல்வி வருமோ என்று சிந்தித்துக் கொண்டிருக்காதீர்கள். உங்கள் மனது 'வெற்றி பெற முடியும்' என்று தூண்டினால் தயங்க வேண்டாம். செயலைத் தொடங்குங்கள் வெற்றி உறுதி.

— என் - இல்

□ அறிஞன் தவறு செய்ய மாட்டான். ஆனால், அவன் தவறு செய்துவிட்டால், அதைத்திருத்தவே முடியாது.

— திபெத் நாட்டுப் பழமொழி

தென் தமிழீழத்தில் இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்ட ஓர் கிராமம். அம்மக்கள் மாவீரர் தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க முயலும் போது இராணுவத்தினரால தாக்கப்படுகிறார்கள். பலர் கொல்லப்படுகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் அடுத்த மாவீரர் தினம் நெருங்குகையில் அந்நாளை எப்படியும் கொண்டாட வேண்டும் என உறுதி எடுக்கின்றனர் இராணுவம் கடுமையாக எச்சரிக்கை விடுக்கிறது. எவரும் மாவீரர் தினம் கொண்டாடும் வகையில் கடைகளைப் பூட்டினாலோ, விளக்குகளைக் கொழுத்தினாலோ, மணிகளை ஒலித்தாலோ சுட்டுக்கொல்லப்படுவார்கள் என இராணுவ அதிகாரி அக்கிராமத்து மக்களை நேரில சென்று எச்சரிக்கிறான். இறுதியில் சிறுவர்கள் தொடக்கம் வயோதிபர் வரையும் ஒருமித்து மாவீரர் தின இரவில் மணிகளை ஒலித்தும், தீபங்களை ஏற்றியும் நிற்கும் போது இராணுவம் வருகிறது மக்கள் எவரும் பயந்து ஓடாமல் நின்ற நிலையிலேயே நிற்கின்றனர் முடிவில் இராணுவ அதிகாரி மக்களின் உறுதியைக் கண்டு தலை குனிகிறான். இது தான் கதை.

இப்படத்தை எடுத்து முடித்த பின்பு தென் தமிழீழத்திலிருந்து வந்த நண்பர் ஒருவரை சந்தித்தேன். அவர் சொன்னார் தென் தமிழீழத்தில் கிரான் என்னுமிடத்தில் இம் முறை சிறப்பாக மாவீரர் தினம் கொண்டாடப் பட்டதென்று. அப்பகுதியைச் சூழ்ந்து சுமார் ஒன்பது இராணுவ முகாம்கள் உள்ளன. அடிக்கடி விமானத்தாக்குதல்கள் நடக்கும். இம்முறை எல்லா இடங்களிலும் தோரணங்கள், அலங்காரங்கள் செய்யப்பட்டு எல்லா வீடுகளிலும் இரவில் தீபங்கள் கொளுத்தப்பட்டு எங்கும் மணிகள் ஒலிக்கப்பட்டன. எதிர்பார்த்ததைப் போல் இராணுவம் வரவும் இல்லை. வானூர்திகள் பறக்கவுமில்லை.

அவர் சொன்னதைக் கேட்டவுடன் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனது கதை பொருத்தமானது தான் என எனக்குள்ளே எண்ணி மகிழ்ந்தேன்.

● இந்தப்படத்தில் நடித்தவர்களுக்கு ஏற்கனவே நடித்த அனுபவங்கள் ஏதும் உண்டா?

ஒரு சிலர் நாடகங்களில் நடித்து அனுபவம் பெற்றவர்கள். ஏனையோர் புதியவர்கள் என்னைப்பொறுத்த மட்டில் நடிப்புத் தெரியாதவர்களை வைத்து நடிக்க வைப்பது திரைப்படத்தில் சுலபமான காரியம். நாடக நடிகர்களை திரைப்படத்திற்கு நடிக்க வைக்கும் போது நாடக பாணியில் இருந்து அவர்களை மீட்டெடுப்பது கடினமானதாகவுள்ளது.

● படத்தைத்தயாரிக்க எத்தனை காலம் சென்றது. எவ்வளவு பணம் செலவானது?

படத்தயாரிப்புக்கான முன் முயற்சிகள் சுமார் மூன்றுமாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் படப்பிடிப்பு வேலைகள் பத்துநாட்களில் முடந்து விட்டன. எல்லாச் செலவுமாக சுமார் ஒரு லட்சரூபா முடிந்தது.

● படம் சிறப்பாக அமைந்தமைக்கு குறிப்பாக உங்களுக்கு உதவியவர்கள் யார்?

கலை, பண்பாட்டுக்கழக முல்லை மாவட்டப் பொறுப்பாளர் திரு சங்கர் எனக்கு எல்ல விதத்திலும் உதவியாக இருந்தார். இப்படத்தில் அவர் நடித்தும் உள்ளார். இம்மாவட்டப் போராளிகளும பல உதவிகளைப்புரிந்தனர். எல்லா நடிகர்களும், கமரா கலைஞர் திரு வ. சந்திரன், இசைக் கலைஞர்கள், பாடகர்கள் அனைவரும் இப்படத்தின் சிறப்பிற்கு இன்றியமையாதோர.

இப்படம் இந்தளவு சிறப்பாக அமைய இன்னொருவரும் முக்கிய காரணகர்த்தாவாக அமைகிறார். அவர் தான் தலைவர் பிரபாகரன் அவர்கள். அவர் இரண்டு மூன்று தடவைகள் படத்தை பார்த்து "இந்தக்காட்சியை இப்படி அமையுங்கள்." "இந்தக்காட்சிகளை மாற்றியமையுங்கள்" என அறிவுறுத்தல் செய்தார். அவரின் பணிப்பின் பேரில் பல கட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டன. பல காட்சிகள் திரும்ப எடுக்கப்பட்டன.

முல்லை மாவட்டத்தளபதி மற்றும், போராளிகள் எமக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தனர். இவர்களுக்கும் இப்படத்தின் உருவாக்கத்திற்கு சகல விதங்களிலும் துணைபுரிந்த அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். ●

# சூரியன் மறையும்போது சிவப்பதேன்?

சூரியன் வானத்தில் மறையும்போது சிவப்பு நிறத்துடன் விளங்குகிறது. ஒளிமயமான அந்தச் சிவப்பின் கவர்ச்சியை என்ன என்பது!

உண்மையில் சூரியன் சிவப்பாகவில்லை. வேறு எந்த விதமான மாற்றமும் அதற்கு ஏற்படவில்லை. அந்தி நேரத்தில் சூரியன் சிவப்பாக இருப்பதுபோல் நமக்குத் தோன்றுகிறது. அதே சமயத்தில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு மேற்கே மக்கள் அதே சூரியனைப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு சூரியன் சிவப்பாகத் தோன்றவில்லை.

அப்படியானால் சூரியன் சிவப்பாகத் தோன்றுவானேன்? சூரியனின் ஒளி நமது வாயு மண்டலத்தின் வழியாக பிரயாணம் செய்கிறது. அந்தத் தூரமே சூரியனைச் சிவப்பு நிறமாகக் காட்டுகிறது. சூரியன் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்திருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி அது கடக்க வேண்டிய வாயு மண்டலமும் அதிகமாக இருக்கும்.

## பல நிறங்களின் கலப்பு

சூரியனின் ஒளியைப் பற்றி ஓர் உண்மையை நாம் நினைவுறுத்திக் கொள்வது அவசியம். பல நிறங்களின் ஒளியின் கலப்பே சூரியனின் ஒளி. இந்தப் பன்னிற ஒளியின் கலப்பு நமக்கு வெள்ளைநிறமாகப் புலப்படுகிறது. ஆனால் வாயு மண்டலத்தில் காற்று புழுதி, நீராவி ஆகியவற்றின் சிறு கிரள்களும் மற்றும் அழுக்குகளும் அடங்கியிருக்கின்றன அவற்றை ஒளி ஊடுருவிச் செல்லும்போது அந்தத்துகள்கள் பல்வேறு நிறங்களைச் சிதறடிக்கின்றன. ஊதா, நீலம், பச்சை ஆகிய ஒளியை வாயுமண்டலம் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பார்க்கிலும் அதிக அளவில் சிதறடிக்கிறது. எனவே சூரியன் தாழ்ந்திருக்கும் போது இந்த ஒளிச் சிதறலின் விளைவாக அதிக அளவில் சிவப்பு நிறமும், மஞ்சள் நிறமும் எஞ்சி நிற்கின்றன. அவை நமக்குச் சூரியனைச் சிவப்பாகக் காட்டுகிறது

வானம் நீலமாக இருப்பதற்குக் காரணத்தை ஒளிச்சிதறல் மூலமாக உணர முடிகிறது. ஊதா ஒளியும், நீல ஒளியும் சிற்றலைகள் உள்ளவை. இவற்றைச் சிவப்பு ஒளியின அலைகளைப் பார்க்கிலும் 10 மடங்கு அதிகமாக வாயு மண்டலம் சிதறடிக்கிறது. இதன் பொருள் என்ன? சிவப்பு ஒளியின் கதிர்கள் நமது வாயு மண்டலத்தை நேர் முகமாக ஊடுருவச் செல்கின்றன நீல ஒளிக்கதிர்கள் நேர் முகமாக வாயு மண்டலத்தை ஊடுருவிச் செல்வதில்லை. அவற்றைக் காற்று. தண்ணீர். தூசி ஆகியவற்றின துகள்கள் சிதறடிக்கின்றன. இவ்வாறு சிதறடிக்கப்பட்ட ஒளியை நாம் நீல வானமாகப் பார்க்கிறோம்.

# பதவிக்குவரும் அரசும்

*நிலநலமும், வளமும் சேர்ந்திலங்கும் தமிழர் தாயகமான தமிழீழத்தில, சிங்களவர்களைக் குடியமர்த்தித் தமிழ் நிலத்தைக் கூறுகள செய்து-தமிழ் இனத்தின குடியாண்மையைக் குறைத்திடலும,*

*சிங்கள மொழியே அரச மொழியென்று நாடாளுமன்றத்தினூடாகக் கூட்டத்தைத் தோற்றுவித்து; தமிழ் மொழியின் மாண்பைச் சிதைத்திடலும்; சிங்கள அரசு தன் குறியெனக் கொண்டது.*

*சிங்கள அரசின் இத்தீய செயல்களினாற் தென்தமிழ் நிலம் விழுங்கப்பட்ட போது .....*

# பாழ்படும் விளை நிலமும்

திருமலை
யோகேந்திரம்

வெண்திரைகளை அள்ளி வீசிக் காலிமுகக்கடல் பொங்கி எழுவதுபோலவே, தமிழ்மொழியைத் தம் உயிரெனக் கொண்ட அறிஞரும், தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் அமைதி வழிப் போராட்டத்திற்கென்று தமிழரசுக் கட்சியின் வேண்டுதலை ஏற்று தமிழீழப் பகுதிகளிலிருந்து கொழும்பு வந்த முன்னூற்றுக்கு மேலான தொண்டர்களும, தமிழ் இனமான உணர்வுடன் ஒருங்கு திரண்டு காலிமுகத் திடலில் அமைதிப்போர் காத்தனர்.

வரிசை வரிசையாக அமர்ந்திருந்து எம்மை எவர் தடுத்திடினும் அஞ்சுகிலோம் எனும் உணர்வுடனும், தம்மை மத்தாகக வரும் அரசுக்காவல் துறையினரின் தடியடித் தாக்குதல்களுக்கும் வீரமுடன் தோள் முயர்த்தி ஈடுகொடுப்போம், எனும் இறுமாப்புடனும்; கூட்டத்தார் அமைதியுடன் அமர்ந்திருந்தார்கள்.

அநியாய மமதை படைத்த ஆட்சியினர் வெடிகுண்டுவீசி எமை அழித்திட்டாலும், தீந்தமிழ்க்காய் இங்கமர்ந்து அமைதிப்போர் செய்வோமென உறுதியுடன் இருந்த தமிழர்களை நோக்கிக் கூக்குரலிட்டவாறு, கைகளில் சிங்கக் கொடிகளுடனும், இரும்புச் சங்கிலிகளுடனும் ஊர்வலமாகச் சிங்கள வன்முறையாளர்கள் சடுதி விரைந்து வந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்றத்துள்ளே அமர்ந்து சிங்கள மொழியே நாட்டின் அரசு இயல்மொழியென்று ஆணை கொணர்ந்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்காட்சி கண்டும் காணாதராய் மகிழ்வுடன் தம் மதிய உணவை உண்டு, கழித்திட்டார்கள்.

கடலே பொங்கிவந்து நீதியைக் கூறினும் ஏற்றுக்கொள்ளத் தயங்கும் சிந்தையராக விளங்கிடும் ஆட்சியாளர்களின் கொடுநெறியை எதிர்த்து நீதி நெறியில்லா ஆட்சி இயலை உலகு அறியும் வகையாக கொழும்பு நகரில் பட்டிமன்றி தமிழீழத்து நகர்கள் எங்கும் மாபெரும் பேரணிகள், கடையடைப்பு எதிர்ப்புக் கூட்டங்கள், அமைதிவழிப் போராட்ட நிகழ்வுகள் எனத் தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியின் வழிநடத்தலுடன் அற்றைப பொழுதில், குறிப்பாக கொழும்பு. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நகரங்களில் நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

1956- 6-5ந் திகதி செவ்வாய்க் கிழமை

ஊர் உறங்கும்போதில், பதினாறு மணி நேரங்களாக உசாவி இருபத்தொன்பது பேரின் எதிர்ப்புகளுடனும், அறுபத்தாறு உறுப்பினர்களின் ஆதரவுடனும், பண்டாரநாயக்கா தலைமையிலான அரசு, சிங்கள மொழியே அரசகரும மொழி என்ற ஆணையைத் தோற்றுவித்ததினால் தமிழீழ மக்கள் கொதிப்படைந்த உள்ளத்தினராயினர்.

ஆங்கிலேயரின் படையாண்ட சில்லாண்டுக் கொடுமையிலும், மிக்கதாக இடும்பைதரும் கொள் படையாம் சிங்களவர் குடியமர்வுகளையும், சிங்கள அரசின் மொழித் திணிப்புரையையும், எதிர்த்திட எழுந்த தமிழர் நாடளாவிய வகையில் தம் மறுப்புணர்வைக் காட்டிடத் திரண்டெழுந்திட்டார்கள்.

1947ம் ஆண்டு முதல் 1956வது ஆண்டு முடிவிற்குள்ளாகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லோயாக் குடியமர்த்தற் திட்டத்தினூடாக மூவாயிரத்திற்கும் மேலாகச் சிங்களக் குடும்பங்கள் சகல வசதிகளுடனும் குடியமர்த்தப்பட்டதாலும்,

திருகோணமலை மாவட்டத்தே அல்லைத்திட்டம், கந்தளாய் குடியமர்வுத் திட்டமென்ற பெருங் குடியமர்த்தற் திட்டங்களூடாக, நாலாயிரத்து ஐநூற்றுக்கும் மேலான சிங்களக் குடும்பங்களைச் சிங்கள அரசு தமிழர் எதிர்ப்புக்களையும் மீறிக் குடியமர்த்திட்டதாலும்;

வெந்து புண்பட்ட தமிழ்மக்கள் சிங்கள அரசை நஞ்செனவெறுத்து, நெஞ்சால் ஒறுத்தனர். இவற்றின் விளைவாகவே அன்றைய தினத்தில் தமிழீழமே ஆரவாரம் கொண்டது.

நகரெங்கும் கறுப்புக் கொடிகள் உயர்த்தப்பட்டுப் பறந்து கொண்டிருக்கையில், கொழுத்தும் வெயிலின் கடுமையையும் மீறிச் சிறு கொழுந்துகளான குழந்தைகளும் முற்றவெளியில் அமர்ந்து அறுநூறுபேர்வரை அமைதிப் போர் செய்தபோதில்; ஏராளமான பெண்கள் கலந்துகொண்டு தம் எதிர்ப்புணர்வை அரசுக்குக் காட்டிவைத்தனர்.

இடையிடையே மட்டக்களப்பு வாவியில் விழுந்து விழுந்து வீசிய காற்று மக்கள்மீது பட்டவண்ணமிருந்து மக்கள் உடலுக்குச் சுகம் கொடுத்தது.

பகல்பொழுது முழுவதும் கடைகள் கொள்வாரின்றி மூடிக்கிடந்தது நகரத்திலேயுள்ள மீன் அங்காடியிலும், மரக்கறி அங்காடியிலும், வியாபாரம் செய்யும் சிங்களவர்களும் தத்தமது கடைகளைப் பூட்டிவிட்டுத் தம் இல்லத் தேகினர்.

இந்நிலை இவ்வாறாக,

கொழும்பு வீதிகளில் இரும்புச் சங்கிலிகளுடனும் கொடிகளுடனான கம்புகளுடனும் வலம்வந்த சிங்கள வன்நெறியர்கள், காலிமுகத்திடலில் அமைதியாக இருந்து அமைதிவழிப் போராட்டத்திலிருந்த தமிழ் மக்களை நோக்கி விரைந்தனர்.

ஒருவர் மாறி ஒருவர் வெறுங் கையினராக இருந்த தமிழர்கள் மீது தடியடித் தாக்குதலை ஆரம்பித்தனர். சிங்களவர்களின் வெறியாட்டத்தில் ஓரிரு மணிநேரங்களுக்குள்ளாகவே பலர் மயங்கினர்; பெருங்காயங்களும் உற்றனர்.

காலிமுகத் திடலில் தொட்ட கலவரம் நாடு முழுதும் தீயெனப் பரவியதை அடுத்துச் சிங்கள அரசு விசேட ஊரடங்குச் சட்டத்தைக் கொணர்ந்தது. தமிழீழத்திலிருந்திட்ட காவல்துறைப் பணியகங்கள் துப்பாக்கிகள் தூக்கிய காவலர்களினால் நிறைக்கப்பட்டன. தமிழ்ப்பகுதிகளில் நகரங்கள் யாவற்றிலுமுள்ள வீதிகள் எல்லாம் துப்பாக்கிகளோடு காவலர்கள் உலவினார்கள்.

மெல்ல மெல்லச் சாய்ந்த பொழுது ஓய்ந்து, புதன் பிறந்தது. அவ்வேளையில், சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் அகப்பட்ட பொருளைக் கையிலெடுத்துக் கொண்டு இரவோடு வந்தவர் போக ஏனையவர்கள் பகலிலேயே தென் தமிழீழத்தையும் நோக்கி வந்த வண்ணமிருந்தனர். நாடெங்கும் தோன்றிய வன்முறைத்தீயில் நூற்றுக்கணக்கான தமிழ் இல்லங்கள் கருகிச் சாம்பலானது. உடைமையும் தம் உடனிருந்தார் உயிரையும் இழந்துபோன தமிழ் மக்களுக்கு அரசின் கூலியாட்கள் செய்திட்ட கொடுமை அறிந்து கொதித்த தமிழ் மக்கள் தமிழீழமெங்கும் பொதுக் கூட்டங்களையும் பேரணிகளையும் நிகழ்த்திய போது மட்டக்களப்பிலுள்ள சிங்களவர்களில் சிலர் தம் உயிர் குறித்த அச்சம் ஏற்பட்டவராகக் கல்லோயாக் குடியமர்வை நோக்கிச் சென்றார்கள்.

கொடுமையுடன் இரு நாட்கள் கொந்தளிப்புடன் நகர தள்ளாடித் தள்ளாடி வெள்ளிக்கிழமை வெளிக்கிட்டு வந்தது. செவ்வாயில் மூண்ட கலவரத்தின் பீதி வெள்ளி வரை அடங்காது பற்றிக் கொண்டேயிருந்தன அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய இடங்களிலிருந்த தமிழ் மக்கள் சிலர் அச்சம் சூழப் பெற்றவராய் தம வாழிடம் பெயர்ந்து மட்டக்களப்பு நகருக்குள் வந்த வண்ணமிருந்தனர்.

தமிழ்மக்கள் இவ்வாறு பெயர்ந்த காலையில், மட்டக்களப்பு நகரின் கண் இருந்த காவல்துறைப் பணிமனையின் மேலாளர் சிங்களவராக இருந்தது; நகரிலுள்ள சிங்கள முதலாளிகள் நெஞ்சில் துணிவைக் காத்தது. இதனால் இவர்கள் பதியத்தலாவை, பெரிய புல்லுமலை ஆகிய இடங்களிலுள்ள தம் உறவினரையும் கூடவே அழைத்து வைத்துக் கொண்டனர். முழுக்க முழுக்கத் தமிழ் மக்களின் வாழிடமாகவிருந்த கல்லோயாவைத் தம் கையகப்படுத்தியது போலவே, அரசின் திட்டமிட்ட குடியமர்த்தற் சதியின் மூலம் வளம் நிறைந்த பெரிய புல்லுமலையென்ற தமிழ் ஊரும் சிங்களவர் வயமாயிற்று - பிபிலை, தோலை, பதியத்தலாவையிலிருந்து சிங்களவர்கள் அரசின் உதவியுடன் பெரிய புல்லுமலையில் குடியமர்த்தப்பட்டார்கள். அவ்வாறே மொனறாகலை, சியாம்பலாண்டுவ, ஆகிய இடங்களில் வாழ்ந்திட்ட சிங்களவர்கள் மூலமாகவும், ஏனைய சிங்கள ஊர்களிலிருந்தோர் மூலமாகவும் கல்லோயா எனும் வளம் மிக்க தமிழர் வாழிடம் சிங்களவர் கையகமாயின்று. இவ்விரண்டு இடங்களிலுமிருந்த சிங்கள வன்முறையாளர்கள் மட்டக்களப்பிலுள்ள சிங்களவர் இல்லங்களில் கலந்துறைந்துள்ளதான செய்தி மெல்ல மெல்ல நகருக்குள்ளிருந்த தமிழரிடையே தலையெடுத்திட்டது.

8ந்திகதி வெள்ளிக்கிழமை இரவு நேரம் 11மணி 30 நிமிட வேளையில் தாண்டவன் வெளியென்ற ஊரிலுள்ள வீடுகள் சில எரிந்து கொண்டிருந்தது. நித்திரையாகிக் கொண்டிருந்த குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு அலறியவாறு பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறிட எரியும் வீடுகளின் நெருப்பை நீரூற்றி அணைக்கும் முயற்சியில் அவ்விடத்து ஆண்கள் மித முனைப்புடன் ஈடுபட்டிருக்கையிலே;

யாரும் எதிர்பாராத வகையில் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் தொடர்ந்து ஆண்களின் அலறலும் அவ்விடத்தே பேரோசையெனக் கேட்டிட்டது. திக்குகள் எங்கும் மக்கள் சிதறி ஓடலாயினர் - முகட்டில் எரிந்து கொண்டிருக்கும் பெரும் நெருப்பின் ஒளியானது துப்பாக்கியுடன் ஓடும் பெரிய புல்லுமலைச் சிங்களவன் றபாயலை இனங்காட்டிய வண்ணம் எரிந்து கொண்டிருந்தது. ❒

(வளரும்)

# தமிழீழத்தின் மக்கள் தொகை

திரு. சி. வரதராஜன்

இலங்கையின் முதலாவது உத்தியோகபூர்வமான குடிசன மதிப்பீடு 1871ம் ஆண்டு பங்குனி திங்கள் 27 ம் திகதி நடைபெற்றது. இதற்கு முன்பாக 1811-ம் ஆண்டு 1821ம் ஆண்டு 1827ம் ஆண்டு 1831ம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் குடிசன மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1833ம் ஆண்டு உருவாக்கப்பட்ட நிர்வாக மாவட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது குடிசன மதிப்பீடு 1871ம் ஆண்டு நடைபெற்றது. இறுதியாகக் குடிசன மதிப்பீடு 1981ம்ஆண்டு பங்குனித் திங்கள் 17ம்திகதி நடைபெற்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழீழ நிலப்பரப்பில மொத்த சனத்தொகை 1871ம ஆண்டு குடிசன மதிப்பீட்டின படி 3,94,235 பேராகும் 1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி சனத் தொகை 20,10,431 பேராகும். 1871 — 1981 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீடுகளின்போது தமிழீழத்தின் மொத்த சனத்தொகையினையும் அதன் வளர்ச்சி வீதத்தினையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

மொத்த சனத்தொகை; வளர்ச்சிவீதம் 1871 — 1981:-

| ஆண்டு | மொத்த சனத் தொகை | வளர்ச்சி வீதம் | ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| 1871 | 394235 | — | — |
| 1881 | 430055 | 9.1 % | 0.91 % |
| 1891 | 467740 | 8.8 % | 0.88 % |
| 1901 | 514558 | 10.0 % | 1.0 % |
| 1911 | 553359 | 7.5 % | 0.75 % |
| 1921 | 567650 | 2.6 % | 0.26 % |
| 1946 | 758684 | 33.6 % | 1.3 % |
| 1953 | 925060 | 21.9 % | 3.1 % |
| 1963 | 1287815 | 39.2 % | 3.9 % |
| 1971 | 1592197 | 23.6 % | 2.9 % |
| 1981 | 2010431 | 26.3 % | 2.6 % |

குடிசன மதிப்பீட்டுத் தரவுகளின்படி 1946ம் ஆண்டிற்குப் பின்னர் தமிழீழத்தின் ஆண்டு சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாக உள்ளதனை கவனிக்கக் கூடியதாக உள்ளது. 1871 — 1946 இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழீழத்தின் மொத்த சனத்தொகை 394235 பேரிலிருந்து 758684 பேராக அதிகரித்திருந்தது. ஆனால் 1946 — 1981 காலப்பகுதியில் தமிழீழத்தின் மொத்த சனத்தொகை 758684 பேரிலிருந்து 2010431 பேராக அதிகரித்தது. எனவே 1946ம் ஆண்டிற்கு முந்திய 75 ஆண்டு காலப்பகுதியில் தமிழீழத்தின் சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு 364449 பேராக மட்டுமே இருக்க 1946ம் ஆண்டிற்கு பிந்திய 35 வருட காலப்பகுதியில் தமிழீழத்தின் சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு 1251747 பேராக இருந்தது. எனவே 1871 1946 இடைப்பட்ட காலப்பகுதியில் சனத்தொகை 92 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருக்க 1946—1981 காலப்பகுதியில் சனத்தொகை 165 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இலங்கையின் சுதந்திரத்தினைத் தொடர்ந்து தமிழீழ நிலப்பரப்புகளில் ஏற்பட்ட வேகமான சனத்தொகை அதிகரிப்பிற்கு சுகாதார மருத்துவ வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றம்; இலவச உணவு உதவிகள் போன்ற சமூக நலத் திட்டங்களின் அறிமுகம் போன்றவற்றினால் ஏற்பட்ட இறப்பு வீத வீழ்ச்சி, உயர்ந்த மட்டங்களில் காணப்பட்ட பிறப்பு வீதம் போன்றவை காரணங்களாகக் கூறப்பட்டன. எனினும் இவற்றிற்கும் மேலாக தமிழீழப் பிரதேசங்களில் இலங்கை அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்கள் வேகமான சனத்தொகை வளர்ச்சிக்கு வழிகோலியது என்பதே உண்மையாகும். அதாவது இயற்கை வளர்ச்சியோடு குடியேற்ற வளர்ச்சியும் சேர்ந்தே இக்காலப் பகுதியில் வேகமான சனத்தொகை வளர்ச்சியை ஏற்படுத்தியது. 1946ம் ஆண்டின் பின்னர் தமிழீழ நிலப்பரப்பில் அதிகரித்து வந்த சிங்களவர்களின் தொகை இதனையே உணர்த்துகின்றது.

1871ம் ஆண்டு தமிழீழ நிலப்பரப்பில் இருந்த சிங்களவர்களின் தொகை 6361 பேர் மட்டுமே. 1946ம் ஆண்டு இதத்தொகை 37158 பேராக அதிகரித்திருந்தது. ஆனால் 1981ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி தமிழீழத்தின் சிங்களவர்கள் தொகை 272559 பேராகும். எனவே 1871 — 1946 இடைப்பட்ட 75 ஆண்டு காலப்பகுதியில் தமிழீழத்தில் சிங்களவர் தொகை 30797 பேரால் மட்டுமே அதிகரித்திருக்க 1946 — 1981 இடைப்பட்ட 35 வருட காலப்பகுதியில் சிங்களவர் தொகை 235401 பேரால் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே 1871 – 1981 காலப்பகுதியில தமிழீழத்தில் சிங்களவர்கள் தொகை 4185 சதவீதத்தினால அதிகரித்திருந்தது. ஆனால் இதே காலப்பகுதியில் தமிழர்களின் தொகையோ

805 சத வீதத்தினால் மட்டுமே அதிகரித்திருந்தது. இதன் விளைவாக தமிழீழத்தின் மொத்த சனத் தொகையில் தமிழர்களின் பங்கு 1871ல் 85.4 சத வீதமாக இருந்து 1981ல் 67.9 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில் மொத்த சனத்தொகையில் சிங்களவர்களின் பங்கு 1871ல் 1.6 சத வீதத்திலிருந்து 1981ல் 13.6 சத வீதமாக உயர்ந்தது. எனவே 1871ம் ஆண்டு தமிழீழத்தில் ஒவ்வொரு 100 தமிழருக்கும் ஏறத்தாழ 2 சிங்களவர்கள் மட்டுமே இருந்தனர். ஆனால் 1981ல் ஒவ்வொரு 100 தமிழருக்கும் 20 சிங்களவர்கள் காணப்பட்டனர்.

கல்லோயா, அல்லை, கந்தளாய், பதவியா, பாவற்குளம் போன்ற குடியேற்றத்திட்டங்கள் தொடக்கம் இன்று மகாவலித்திட்டம் வரை இலங்கை அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்கள் தமிழீழத்தின் சனத்தொகையின் இன விகிதாசாரத்தினைப் பெருமளவில் மாற்றியுள்ளது. இச் சிங்களக் குடியேற்றத்திட்டங்களின் உண்மையான தாக்கத்தினை கிழக்கு மாகாணத்தில் அவதானிக்க முடியும். 1871ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகை 112509 பேராகவும் இவர்களில் தமிழர்கள் 66996 பேராகவும் சிங்களவர்கள் 5252 பேராகவும் இருந்தனர். 1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத் தொகை 994177 பேராகும். இவர்களில் தமிழர்கள் 411846 பேர் சிங்களவர்கள் 256589 பேர் ஆகும். எனவே இதன்படி 1871 — 1981 காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் மொத்த சனத் தொகை 783 சதவீதத்தினால் அதிகரித்திருக்க சிங்களவர் தொகையோ 4785 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதே நேரத்தில் தமிழர்கள் தொகையோ 515 சத வீதத்தினால் மட்டுமே அதிகரித்திருந்தது. இதன் விளைவாக 1871ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத் தொகையில் 59.5 சத வீதமாக இருந்த தமிழர் பங்கு 1981ல் 41.4 சத வீதமாகக் குறைவடைந்தது. மாறாக 1871ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத் தொகையில் 4.7 சத வீதமாக இருந்த சிங்களவர் பங்கு 1981ல் 25.8 சத வீதமாக அதிகரித்தது. 1871ல் கிழக்கு மாகாணத்தில் 1871ம் ஆண்டு ஒவ்வொரு 100 தமிழருக்கும் ஏறத்தாழ 8 சிங்களவர்கள் காணப்பட்டனர். ஆனால் 1981ல் ஒவ்வொரு 100 தமிழருக்கும் 62 சிங்களவர் காணப்பட்டனர்.

சிங்களக் குடியேற்றங்களே இவ்வகையில் சிங்களவர்களின் தொகையை தமிழீழத்தில் அதிகரிக்கச் செய்தது என்பதனை எவரும் மறுக்கமுடியாது ☐

## சிரிப்பு ஒரு மருந்து

☐ "இங்கிலாந்து மன்னர் எங்கே முடிசூட்டப்படுகிறார்?"

"அவரது தலையில்"

● ● ●

☐ எல்லாப் பிரச்சினைகளுக்கும் மோசஸ் தான் காரணம் என்கிறேன் நான என்றான் ஒரு யூதன்.

எங்கள் பிரச்சினைக்கும் அவருக்கும் என்ன தொடர்பு என்று கேட்டான் ஒருவன்.

மோசஸ் செங்கடலைக் கடந்தபோது வலது பக்கத்துக்குப் பதிலாக இடது பக்கம் திரும்பியிருந்தால் அராபியருக்கு மணல் கிடைத்திருக்கும் எங்களுக்கு எண்ணெ கிடைத்திருக்கும் என்றான் யூதன்.

● ● ●

☐ ஒரு மின்மினிப் பூச்சி மற்றொன்றிடம் சொன்னது; "ஒரு தரம் தள்ளிவிடு — என் 'பற்றரி' முடிந்து போச்சு."

☐ ஒரு விலங்குக் காட்சியகத்தில் இரு குரங்குகள் பரிணாமவளர்ச்சி பற்றிப் பேசிக்கொண்டிருந்தன.

ஒன்று கேட்டது.

"அப்படியென்றால் நான் இந்த நிலையக் காப்பாளனின் சகோதரன் என்கிறாயா."

● ● ●

☐ செயலக மேலாளர் தன் அறையிலிருந்து வெளியே சென்று தன் 'ஸ்டெனோ' விடம் சொன்னார்:

"சிந்து ...... இந்தக் கடிதம் அந்தரங்கமானது என்று உனக்கு சொன்னேன். ஆனால் நீ உன் கண்களை மூடிக்கொண்டு 'ரைப்' அடிக்கத் தேவையில்லை."

● ● ●

☐ சுண்டெலி ஒன்று தன் தாயிடம் சொன்னது:

"என் மூன்று சகோதரிகள் உளவியல் பரிசோதனையில் உள்ளனர். ஒரு மாமா இருதய ஆராய்ச்சியில்...... அது எனக்குப் பெருமைதானே."

—எஸ். பி கே.

அழகான, தரமான
ஆடைவகைகள்

நியாயமான விலைகளில் கொள்வனவு செய்திட-
கிளிநொச்சியில் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

சாந்தி ரெக்ஸ்
யாழ். வீதி, கிளிநொச்சி.

உங்கள் வீட்டுத் தேவையை பூரணமாக
திருப்திப்படுத்தும் ஸ்தாபனம்.

- பலசரக்கு சாமான்கள்
- பால்மா வகைகள்
- சாய்ப்புச் சாமான்கள்

அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

சந்திரன் பிறதர்ஸ்
யாழ். வீதி, கிளிநொச்சி.

தமிழீழத்தின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியில் பின்தங்கிய மாவட்டமாகவே இருந்து வருகின்றது. நிலவளமும், கடல்வளமும், மனிதவளமும், கலைவளமும் நிறைந்து காணப்படும் இம் மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் சமூக பொருளாதார துறைகள் சார்ந்த அபிவிருத்தி முயற்சிகள் சிங்கள அரசினால் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளின் வகை, அவற்றின் தரம், இவற்றின் பரம்பல் தன்மை என்பவற்றை கருத்திற் கொண்டு அவதானிக்கையில் பிரதான நிர்வாக மையமான மன்னார் பட்டினமும் அதனைச்சூழவுள்ள ஒரு சில பெரிய கிராமங்களும் தவிர பெரும்பாலான கிராமங்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிய அல்லது புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வந்துள்ளன.

களிடையேயும், கிராமங்களிடையேயும், கல்வித்தரத்தில் ஒப்புரவின்மை நிலவிவருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தின் கல்வி நிலை: -ஒரு நோக்கு

கணிக்கப்பட்ட நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இந்நிலையில் தமிழீழம் எங்கும் இன்று மூடுக்கி விடப்பட்டுள்ள சிங்கள அரச பயங்கரவாதம் என்ற பூதம் தன் கோரப்பற்களை அகலவிரித்து வெறியாட்டம் ஆடிவருவதை யாவரும் அறிவர். தமிழர்களின் வாழ்வும் வளமும் சிதைக்கப்பட்டு வருகின்றது. எம் இனத்தின் அழியாச் சொத்தான கல்வி வளமும் கருவறுக்கப்பட்டு வருகின்றது. தமிழீழத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இன்று இதே நிலைதான் தொடர்கிறது. இப்பின்னணியில் மன்னார் மாவட்டத்தில் கல்வித்துறை சார்ந்து எழுந்துள்ள அவல நிலைபற்றி சுருக்கமாக நோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஏறக்குறைய 1985 ச.கி.மீற்றர்களைக் கொண்ட இம் மாவட்டம் 1981ம் ஆண்டு கணிப்பீட்டின்படி 106940 பேரைக்கொண்டிருந்தது. இதில் தமிழர்களின் எண்ணிக்கை 68178 பேராகும். மன்னார், மாந்தை, முசலி, நானாட்டான், மடு ஆகிய 5 உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளைக்கொண்ட இம்மாவட்டம் மன்னார்தீவு பெருநிலப்பரப்பு என்ற இரு கூறுகளைக்கொண்ட அமைப்புடையதாகவுள்ளது. இதன் பிரதான நிர்வாக மையம் மன்னார் பட்டினமாகும். இது மன்னார்த்தீவில் அமைந்துள்ளது.

### கல்வியும் கல்விக்கான, வளங்களும்

ஒப்பீட்டுரீதியில் இம்மாவட்டம் ஏனைய மாவட்டங்களைவிட பின்தங்கிய நிலையில் இருப்பதுடன் மாவட்டத்திற்குள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு குறிப்பாக கரையோர மீன்பிடிக் குடியிருப்புக்களும், பிரதான நிலப்பரப்பில் அமைந்துள்ள விவசாயக் கிராமங்களும் கல்வியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வந்துள்ளன. கல்விக்கான வாய்ப்பும் வளமும் மைய நிர்வாகப்பகுதிக்குச் சென்றடையாத நிலையில் அப்பகுதி சார்ந்தோர் தொடர்ந்தும் விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் துறைசார்ந்த உயர்கல்வி வாய்ப்பை பெற தூரவிடங்களிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் எதுவித உயர்கல்வி வாய்ப்பையும் பெறாது இடைநிலைக் கல்வியோடு படிப்புக்கு முழுக்குப்போட்டு வாழ்வில் திசைகாணாது எங்கோ அலைந்துதிரியும் நிலைதான் காணப்படுகின்றது. கல்வி நிர்வாகத்திலிருந்த சுயநலவாதிகளும், முஸ்லிம்களின் ஆதிக்கமும் பல சிறிய தமிழ்க் கிராமங்களின் கல்விவளர்ச்சிக்கு பெரும் தடைக்கற்களாக அமைந்தன. போக்குவரத்து வசதியீனங்களும் பலவீனமான பொருளியல் நிலமைகளும் நகரப்பகுதிகளுக்குச் சென்று உயர்கல்வியை பெறுவதற்கு வாய்ப்பைக் கொடுக்கவில்லை. இத்தகைய ஒரு நிலையில் இரண்டாவது ஈழப்போர் வெடித்ததும் சிங்கள இராணுவ வெறியாட்டம் உச்சகட்டத்தை அடைந்தமையினால் கல்விக்கான வாய்ப்புக்கள் முற்றாகச் சீர்குலைந்து போயின.

மன்னார் கல்விப் பிராந்தியத்தில் பொருத்தமாகவுள்ளபாடசாலைகளின் எண்ணிக்கை 104 ஆகும். இதில் 3 சிங்களப் பாடசாலைகளும் 27 முஸ்லிம் பாடசாலைகளும்தவிரமீதி74 பாடசாலைகளும் தமிழ்ப்பாடசாலைகளாகும். எண்ணிக்கையில் தமிழ்ப் பாடசாலைகள் அதிகமாயினும் தரமடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றபோது நான்கு 1 ஏ பி தரவீதம் பாடசாலைகள் இரண்டும், பதினொரு 1 C தரவீத பாடசாலைகளில் ஆக ஐந்தும் தமிழ்ப்பாடசாலைகளாகவும் மீதி முஸ்லிம் பாடசாலைகளாகவும் அமைந்திருந்தன. பெரு நிலப்பரப்பில் நானாட்டான் உ. அ. அதிபர் பிரிவில் மூன்று 1 C தர வகைப்பாடசாலைகளும், அடம்பனில் 1 பாடசாலையுமாக மொத்தம் நான்கு பாடசாலைகள் மட்டுமே க. பொ. த. உயர்தர கலை/வர்த்தக பிரிவுகளை

> ■ சட்டங்கள் அனைத்தையும் ஒழித்து விட்டாலும் கூட, நல்ல மனிதர்கள் நல்ல வாழ்க்கையைத்தான் நடத்துவார்கள்.
>
> — [illegible]

மட்டும் கொண்டதாக காணப்பட்டது. சிலாபத்துறை மடு ஆகிய உ. அ. அதிபர் பிரிவில் உயர்தர வகுப்புக்கள் கொண்ட (1C தரம்) தமிழ்ப் பாடசாலைகள் எதுவும் இதுவரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. விஞ்ஞான, கணித பிரிவுகளைக் கொண்ட (IAB தரம்) பாடசாலைகள் மன்னார் தீவுப்பகுதியிலேயே அமைந்திருந்தது. இத்தகைய ஒரு சமனற்ற பரம்பல்நிலை இப்பிரதேச மக்களிடையே கல்வித்தரத்தில் பாரிய இடைவெளியைத் தோற்றுவித்திருந்தது. அதாவது மன்னார் பட்டினமும், அதனைச்சார்ந்த சில கிராமங்களும் உரிய கல்விவாய்ப்பைப்பெற தூரவுள்ள தமிழ்க் கிராமங்கள் உயர்கல்வி பெறமுடியாது புறக்கணிக்கப்பட்டன. அதேவேளை முசலியில் ஒன்றும், பண்டிவிரிச்சான் கொத்தணியில் பெரியமடு, காக்கையன்குளம், விடத்தல்தீவு ஆகிய இடங்களில் முஸ்லிம் மக்களுக்கென உயர்தர வசப்புக்கள் கொண்ட பாடசாலைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தமையும் இங்கு நோக்கத்தக்கது.

## இன்றையநிலை

ஈழப்போர் மூண்டதின் பின்னர் முஸ்லிம்கள் வெளியேறியதைத் தொடர்ந்து முஸ்லிம் பாடசாலைகள் யாவும் செயலிழந்தன. அதேவேளை இப்பிரதேசத்தின் கரையோரப்பகுதிகளிலும், மன்னார்தீவுப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக தமிழ்மக்கள் ஆயிரக் கணக்கில் அகதிகளாக இந்தியாவுக்கும், மடுவிற்கும் இடம்பெயரலாயினர். இராணுவம் படிப்படியாக மேற்கொண்ட ஆக்கிரமிப்புக் காரணமாக பலதமிழ்க்கிராமங்கள் வெறிச்சோடிய நிலையில் அங்குள்ள தமிழ் பாடசாலைகளும் செயலிழந்தன. இந்த வகையில் மன்னார் தீவிலுள்ள 16 தமிழ்ப் பாடசாலைகளில் 11 பாடசாலைகள் மூடப்பட்டன. இராணுவம் தனது நிர்வாகத்தின் கீழ் தீவுப்பகுதியை மீட்டுள்ளதாகக் கூறியபோதிலும் இதுவரை ஆக 5 பாடசாலைகள் மட்டும் அரைகுறையுடன் இயங்குகின்றன. சுமார் 6589 தமிழ் மாணவர்களைக் (1990ல்) கொண்ட மன்னார்தீவுப்பகுதி இன்று 1500க்கும் குறைவான மாணவர்களையே கொண்டிருப்பதுடன் விரல்விட்டு எண்ணக்கூடிய உயர்தரவகுப்பு மாணவர்களையும் கொண்டிருப்பது அறியப்பட்டது. விஞ்ஞானப்பிரிவுகளைக் கொண்ட புனிதசவேரியார் ஆண்கள் ம. வி பெண்கள் ம. வி என்பன ஆசிரிய ஆளணி வளம் ஆய்வு கூடங்கள், நூல்நிலையம், ஏனைய வளவசதிகளற்ற நிலையில் ஊசலாடிக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பெருநிலப்பரப்பினைப் பொறுத்தவரையில் ஆரம்பகால இராணுவ ஆக்கிரமிப்பின் போது வங்காலை கொத்தணி பிரிவிலுள்ள 10 தமிழ்ப் பாடசாலைகளும், பின்னர் நானாட்டான் கொத்தணியிலுள்ள 7 தமிழ்ப் பாடசாலைகளும், சிலாபத்துறை கொத்தணியில் 4 தமிழ்ப்பாடசாலைகளும் ஆக்கிரமிப்புக்குள்ளாகின. இவ்வருட இறுதிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 'அதிவேக அதிரடி' என்ற மிலேச்சத்தனமான ஆக்கிரப்பின் போது அடம்பன் கொத்தணியிலுள்ள 11 தமிழ்ப் பாடசாலைகளும் ஆக்கிரமிப்புக்குள்ளாகின. இன்று மொத்தமாக 32பாடசாலைகள் வரையில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும் 10 பாடசாலைகள் வரையில் இராணுவ வேலி எல்லைகளை அண்மித்தும் செயலிழந்தநிலையில் உள்ளன. உயர்தர வகுப்புக்களைக் கொண்டு இறுதிவரை இயங்கிய ஒரேயொரு பாடசாலையான முருங்கன் ம. வி. இராணுவ முகமாக மாறி இன்று விடுபட்டநிலையில் முழுமையான சேவையை இன்று வழங்க முடியாத நிலையிலும் காணப்படுகின்றது. அடிக்கடி இப்பகுதி இராணுவ சுற்றிவளைப்பு, எறிகணைவீச்சுக்களுக்கு இலக்காகி வருவதனால் குறைவான மாணவர்களே வருகைதருகின்றனர். இவை தவிர இன்று இயங்கிவருகின்ற பாடசாலைகளில் அதிகமானவை 6ம் வகுப்புவரையுள்ள (தரம் 3 வகை) ஆரம்பபிரிவு பாடசாலைகளாகவே உள்ளன. க. பொ. த சாதாரண தரம் வரை இன்று நான்கு பாடசாலைகள் மட்டுமே இயங்கிவருகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1990 ஆரம்பத்தில் பெருநிலப்பரப்பில் மாணவர் தொகை 19 ஆயிரத்துக்கு அதிகமானதாகும். ஆனால் இன்று 8957 மட்டுமே. மீதி அகதிகளாக இடம் பெயர்ந்து மீண்டும் திரும்பமுடியாத நிலையிலுள்ளனர்.

> ● ●
>
> ☐ நமது தலையாயப்பணி நமக்கு அருகில் இருக்கும் காரியங்களை உடனே செய்து முடிப்பது தான். தொலைவில் இருக்கும் காரியங்களை அடுத்ததாகக் கவனிப்போம்.
>
> — தோமஸ் கார்லைல்

## மடு திறந்த நிவாரணப் பாடசாலை

மடு அகதிமுகாமை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே மடு திறந்த நிவாரணப்பாடசாலையாகும். ஈழப்போர் வெடித்தபின் இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்த அகதிகளில் கணிசமான தொகையினர் மடு தேவாலயத்தை நாடி தஞ்சமடைந்தனர். ஆக்கிரமிப்பு தீவிரமடைந்ததைத் தொடர்ந்து படிப்படியாக மடுப்பகுதியில் அகதிகளின் எண்ணிக்கை பெருகி 25 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகளைக் கொண்டதாக மாறின. குறிப்பாக வவுனி/மாவட்டத்தின், செட்டிகுள உதவி அரசாங்க அதிபர் பிரிவினைச் சேர்ந்தவர்களும் மன்னார் மாவட்டத்தில் நானாட்டான், சிலாபத்துறை அடம்பன் உதவிஅரசாங்க அதிபர்பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்கியிருக்கின்றனர்.

மா நகர சபை
யாழ்ப்பாணம்




இருப்பிடங்களையும், உடைமைகளையும் இழந்தது டன் கல்வியையும் இழந்த மாணவர்களுக்காக உருவாக்கிய திறந்த நிவாரண பாடசாலையில் இன்று மொத்தம் 38'6 பேர்வரையில் கல்விபயிலுகின்றனர். மன்னார் — 1353 பேர், வவுனியா 1417, திருமலை 212, முல். தீவு 543, யாழ்பாணம் 15 ஆகும். 12 தொண்டர் ஆசிரியர் உட்பட 65 ஆசிரியர்கள் வரையில் இங்கு உள்ளனர். இம்மாணவர்களுக்கு வானமே கூரை, மரங்களே வகுப்பறை, தளபாடங்கள், புத்தகங்கள், நூல்நிலையங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் அடிப்படை சுகாதார வசதியற்றநிலையில் மரங்களின் கீழும், வெய்யில், விறாந்தைகளிலும், நிலத்தில்கீழ் இருந்து தமதுகல்வியை பெற்றுவருகின்றனர். எழுதுவதென்றால் நிலத்தில் வைத்தே எழுதும் நிலை. க. பொ. த சாதாரணதரம், உயர்தரப் பரீட்சைகளில் மிகச்சிலரே பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இன்று 47 உயர்தர வகுப்பு மாணவர்களும், 150 சாதாரண மாணவர்களும் தமிழீழ மாணவர் அமைப்பின் உதவியுடன் பண்டிவிரிச்சானில் கல்வி பயிலுவதற்கான ஒழுங்குமுறையைச் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. உயர்தர கல்வியின் வீழ்ச்சியானது பல்கலைக்கழக தெரிவிலும் பெரும்வீழ்ச்சியை காட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகும். யாழ் - பல்கலைக்கழக மன்னார் மாவட்ட ஒன்றியமானது உயர்தரகல்வியை வழங்குவதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவருவதும் ஒரு முக்கியமான நடவடிக்கையாகவுள்ளது.

சிங்களப் பேரினவாதத்தின் விசக் கொடுக்குகள் நறுக்கப்படும் வரை, சிங்கள இராணுவப் பேய்களின் கோரப்பற்கள் பிடுங்கப்படும் வரை எம்கல்வி வாய்ப்பானது இருள் சூழ்ந்ததாகவே இருக்கும்- இதனைத் தகர்த்தெறிந்து கல்விச்செல்வத்தை அழியவிடாது பாது காப்பது நம் அனைவரினதும் கடமையாகும். □

இராமன், மனைவி சீதையோடும் தன் தம்பி இலக்குவனோடும் கானகம் செல்கிறான். கங்கை யாற்றை அடையும் வழியிலே நடந்து கொண்டிருக்கின்றனர். தாமரை மலர்ந்த தடாகங்களின் அழகையும் தடாகங்களிலே துணையோடு ஆடிக்களிக்கும் அன்னங்களையும் பன்னிற மலர்கள் மலர்ந்த சோலைகளையும் இன்னொளி மொழுப்பும் பறவைகளையும் விலங்குகளையும் கண்டு களித்தவாறே செல்கின்றனர்.

காலைக் கதிரவனின் இளமஞ்சள் நிற ஒளி, மரங்களில் மரகதமணி போலும் பச்சை இலைகளிலே பட்டுத்தெறிக்கின்றது.

இந்த இயற்கையினூடே, கரியசெம்மலும் சிவந்த வாய்ச் சீதையும் செல்கின்ற அழகு, கண்கொள்ளாக் காட்சியாகக் கவிப்பேரரசன் கம்பனுக்குப் படுகிறது.

கதிரவன் ஒளியையும் விஞ்சுகின்ற ஒளியுடைய காகுத்தன் (இராமன்) மேனி அழகிலே கம்பன் கவியுள்ளம் சிக்கித் திணறுகிறது.

■ இலக்கியச் சொல்லின்பம்

# இராமனின் மேனியழகிற்கு உவமை தேடும் கம்பன்

பண்டிதர் வீ. பரந்தாமன்

"வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும்
போனான் ........"

இராமனுடைய மேனியழகுக்கு மிகப்பொருந்தக் கூடிய உவமையைத் தேடிப் பார்க்கிறான் கம்பன்.

மையைச் சொல்லலாமோ?

"மையோ........?"

பொருந்தாது!

ஏன்?

மை, இராமன் மேனிபோல் கரியதுதான்; ஆனால், ஒளியில்லையே!

"மையோமரகதமோ........?"

மரகதம்!

அதுவும் ஒவ்வாது!

ஒவ்வாதா?

நிறம், ஒளி இரண்டும் சரி; இராமன் மேனியின் மென்மை, மரகத மணியாம் கல்லிலே எங்கே?

அப்படியென்றால், கரிய கடலைச் சொல்லலாமோ?

"மையோமரகதமோமறி கடலோ ........?"

சீ! இருட்கடல் — பிறர்க்குக் கொடாத உவர்க்கடல், ஒளியுடைமேனி வள்ளலாகிய இராமனை ஒப்பது எவ்வாறு?

கவிப்பேரரசர் தடுமாறுகிறார்!

ஆ! மழைமுகில் உவமையாகுமே!

"மையோமரகதமோமறி கடலோமழை முகிலோ?
..........?"

கருமை?

— உண்டு!

மென்மை?

— உண்டு!

கொடை?

— அதுவும் உண்டே!

எல்லாஞ்சரி; ஒளி?

— ........!

கம்பர் உள்ளம் வெம்புகிறது! — திகைக்கிறது! — திணறுகிறது! கவிப்பேரரசு என்ற முடியை, இனி, கழற்றித் தொலைவிலே வீச வேண்டியது தான்!

விடுவானா கம்பன்?

ஆகா! பாடிவிட்டான்! இராமனின் அழகைப் பிறர் வியக்கும் வண்ணம் பாடியே விட்டான்!

என்ன உவமை சொன்னான் என்பீர்களா? பாடலைப் படியுங்கள்:

"வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின் - மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் - போனான்
மையோமரகதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோ இவன் வடிவென்பதொர் அழியா அழ - குடையான்"

என்னையா விளையாடுகிறீர்? மை, மரகதம், கடல், மழைமுகில் — இவற்றைத் தவிர வேறொரு உவமையு மில்லையே.

கூர்ந்து நோக்குங்கள்! பாடியே விட்டான்! எப்படி?

கவிப்பேரரசன், மேலே சொல்ல முடியவில்லையே என்று தலையில் கைவைத்து 'ஐயோ' என்கிறானே!

ஆம்! இந்த 'ஐயோ' என்ற தன் ஆற்றாமையைக் குறிக்கும் சொல்லாலே, இராமனுடைய மேனியழகு, மை — மரகதம் — கடல் — மழைமுகில் இவையாவற்றிலும் உயர்ந்ததோர் அழகாகும் என்று சொல்லாமல் சொல்லிவிட்டானே!

"ஐயோ" என்பது ஓரிடைச்சொல்

இடைச்சொல் தனித்துப் பொருள் தராது என்பர் இலக்கணியர். இச்சொல் இரக்க உணர்ச்சியை வெளிப்படுத்தும் குறிப்பிடைச் சொல்லாகும்.

நல்லியற் கவிஞனான கம்பன், இயல்பாகப் பொருள் உணர்த்தாத ஓர் இரக்கக் குறிப்பிடைச் சொல்லை, ஆற்றலுள்ளதாக அமைத்துவிட்ட புலமையே புலமை! ஆற்றலே ஆற்றல்!

வெறுஞ் சொல்லாகிய இந்த 'ஐயோ' இந்த இடத்திலே நின்று எவ்வளவோ பொருள் உணர்த்தி உணர்ச்சியுண்டாக்கி இன்பம் பயக்கிறது பார்த்தீர்களா?

முன்னர் எகிப்திய பிரமிட்டுக்களின் அடியில் புதையுண்டுகிடந்த மம்மிகள் (பழுதடையாது காப்பாக வைக்கப்பட்டுள்ள எகிப்திய அரச பரம்பரையினரின் உடல்கள்) பற்றி பல விசித்திர விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இவைகள் பற்றி மந்திர தந்திரக் கதைகள், பேய்கள் ஆவிகளோடு தொடர்புபடுத்தி எடுக்கப்பட்ட திரைப்படங்கள் புதையல்களை காக்கும் காவல் தெய்வங்கள் என எழுதப்பட்ட புனைகதைகள் எனப் பற்பல தோன்றின. ஆனால் தற்கால அறிவியல் கருவிகள் மம்மிகளின் இரகசியங்கள், அவற்றின் வரலாறுகள் பற்றிய உண்மையான தகவல்களை தரத்தொடங்கி விட்டன.

# கணினிகளும் மம்மிகளும்

— பாலகுமாரன்

முன்னர் மம்மிகளின் மர்மங்களை அறிய முயன்ற ஆய்வாளர்கள் மம்மிகளை அவற்றினை காத்துவைத்த பேழைகளிலிருந்து அகற்றி அவற்றைச் சுற்றியுள்ள மேலுரிகளை மிகச் சிரமப்பட்டு நீக்கிய பின்னரே தமது ஆய்வுகளை செய்யமுடிந்தது. இவ்வாறு செய்யும்போது மம்மி பெருமளவு சேதமடைந்ததோடு அதைத் தொடர்ந்து பழுதடையாது வைத்திருப்பதும் கடினமான பணியாயிற்று. ஆனால் அண்மையில் பிரித்தானிய அரும்பொருள் பேண் காட்சியகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்ட மம்மிகளில் ஒன்று எவ்வித சேதமும் இல்லாமல் விசித்திரமான பரிசோதனை ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டது. லண்டனில் உள்ள சென்தோமஸ் வைத்தியசாலையில் இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அங்குள்ள மூளையில் புதுவளரிகள் (Brain Tumour) தோற்றுவதை கண்டுபிடிக்க பயன்படுத்தப்படும் மிகப் புதிதான கருவி (எக்ஸ் கதிர்களை பயன்படுத்தி கணணி உதவியோடு இயங்குவது Computerized Tomography Scanner) உதவி கொண்டு இம் மம்மி பரிசீலிக்கப்பட்டது. ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழமையும் 20 ம் நூற்றாண்டில் அறிவியல் புதுமையையும் சந்தித்ததன் விளைவாக பல புதிய அரிய தகவல்களைப் பெற முடிந்துள்ளது.

மூவாயிரம் ஆண்டுகள் பழமையான இம் மம்மி ஒரு பெண் மதகுருவினதாகும் இது எகிப்திய இருபத்தோராவது அரச பரம்பரையைச் சேர்ந்தது (கி. மு. 1085 - 945) இதன் உண்மைப் பெயர் Tjentmuten-gebity என்பதாகும். சுருக்கமாக ஜெனி என்று பெயரிடப்பட்டுள்ளது. ஜெனி வாழ்ந்த காலத்தில் தான் எகிப்தில் இறந்தவர் உடல்களை பேணி காக்கும் கலை உச்சம் பெற்றிருந்ததாலே ஜெனியின் மம்மி ஆய்விற்கு தெரிவு செய்யப்பட்டது. அத்தோடு ஜெனி வைக்கப்பட்டிருந்து அலங்கரிக்கப்பட்ட பேழையானது லினனும் பிளாஸ்டரும் (linen, Plaster) கலந்த கலவையொன்றால் உருவாக்கப்பட்டிருந்ததால் கணனியின் ஆய்விற்கு இலகுவாகவிருந்தது. இவ்வாய்வின் மூலம் ஜெனியின் மண்டையோடும் உடலும் பற்றிய மிகத்தெளிவான பிரதிமைகளை பெறமுடிந்தது. இவை மின்காந்த நாடாக்களில் பதிவாக்கப்பட்டு கணணியின் உதவியோடு முப்பரிமாண வடிவங்களாக்கப்பட்டன. இவை மூலம் ஜெனி பற்றிய உண்மையான தகவல்களை பெறமுடிந்துள்ளது. முன்னர் ஜெனியின் வயது 25 — 40க்கும் இடைப்பட்டது என கணிப்பிடப்பட்டிருந்தது இப்பொழுது அவரின் வயது 19 — 23 இடைப்பட்டதாக மாற்றப்பட்டுள்ளது. ஏனென்றால் இவரின் பற்கள் நல்ல நிலையிலிருப்பதும் 'ஞானப்பல்' எனப்படும் பல் தோன்றும் நிலையிலிருப்பதும் இதற்கு காரணம். அத்தோடு ஜெனியின் மூளை, வயிற்றின் உட்பாகத்தில் குடல், ஈரல், இரைப்பை, சுவாசப்பை போன்ற உறுப்புக்கள் அகற்றப்பட்டிருப்பதும் தெரிந்தது. மூளை இருந்த இடத்தில் மூக்கால் நுழைக்கப்பட்ட லினன் துணிப்பந்து அடைக்கப்பட்டுள்ளது. உள் உறுப்புக்கள் நீக்க பயன்பட்ட வயிற்றின் இடது பக்க துவாரம் தகடு ஒன்றின் மூலம் மறைக்கப்பட்டுள்ளது. கண்கள் இரண்டும் நீக்கப்பட்டு அவ்விடத்தில் கண்ணாடி போன்ற பொருள் ஒன்றினால் செய்யப்பட்ட செயற்கைக் கண்கள் பொருக்கப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றின் மூலமும் ஜெனியின் இறந்த உடல் மிக நேர்த்தியான முறையில் பேணப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. அத்தோடு தீய ஆவிகளிலிருந்து பாதுகாக்க கட்டப்படும் பறவைகள், பூச்சிகள் வடிவிலமைந்த தாயத்துக்கள் பலவும் இவ்வுடலில் காணப்படுகின்றன.

பிரித்தானிய அரும்பொருள் காட்சியக பொறுப்பாளர் பல புதிய தகவல்களை பெற முடிந்தது குறித்து பெரிதும் மகிழ்வடைவதாக கூறுகிறார். அத்தோடு பல்வேறு காலகட்டத்திற்குரிய வெவ்வேறு மம்மிகளை இப்புதிய ஆய்விற்குட்படுத்துவது மூலம் எகிப்தியரின் இறந்த உடல்களை பேணும் கலையின் நுணுக்கங்கள் பலவற்றையும் அறிய முடியும் எனவும் நம்புகிறார். ஏனெனில் எகிப்தியரோ இக் கலை குறித்து எவ்வித தகவல்களையும் எழுத்து வடிவில் விட்டுச் செல்லவில்லை. முன்னர் எகிப்திய மம்மிகளை பற்றி ஆராய விரும்புவோர்க்கு 'வரலாற்றின் தந்தை' எனப்படும் கிரேக்க வரலாற்றாசிரியரான கெரடோட்டஸ் என்பவரால் மம்மிகள் பற்றி எழுதிய குறிப்புக்களே உதவின. இப்போது கெரடோட்டஸ் கூறியவை யாவும் உண்மையே என்பது இப்புதிய ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

எது எப்படியிருப்பின் எகிப்திய மம்மிகள் பற்றி விசித்திர கற்பனைகள் வர இடமில்லாமல் போய்விட்டது என்பது பலருக்கு இனிக் கசப்பானதாக இருக்கலாம். □

# அடுப்புக்குள் வேகும் நிலை மாற்ற...

"எமது வாழ்க்கைக்காலம் சமையலறைக்குள்ளேயே முடிந்து விட வேண்டியது தானா?" பெரும்பாலான பெண்களின் துயரத் தவிப்பு இது. 'எமது தலை விதியை மாற்றவே முடியாதா, என்று மனதுக்குள் குமைகின்றார்கள் இவர்கள். ஆனால் தாம் தான் அதனை மாற்றவேண்டும் என்பதைக்கூட விளங்கக் கொள்ள முடியாத நிலையில் தான் இவர்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அடுப்புக்குள் பெண்கள் கருகும் இந்த அவல வாழ்வுக்கு முடிவு கட்டுவதற்கான போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இப்படி ஒரு மாற்றமும் நடந்தால் ... ? எம் சிந்தனைப் பொறியில் தட்டியது இது ....

ஒரு குடும்பத்தில் ஒரு பெண் சமைக்கும் போது அந்த சமையல் வேலைகளில் உதவுவது அவளின் மகளாக, தாயாக, மருமகளாக, பேத்தியாகத்தான் இருக்கும். கணவனோ, மகனோ, தந்தையோ, பேரனோ உதவி செய்ய முன்வரமாட்டார்கள். விதிவிலக்காக சிலர் இருக்கக்கூடும். ஆனால் பெரும்பாலான வீடுகளில் அங்கு வாழும் பெண்கள் அனைவருமே சமையல் வேலைகளில் ஈடுபடுவார்கள்.

இவ்வாறு பெரும்பாலான பெண்களின் ஆற்றல் வீட்டுக்குள்ளே முடக்கப்படாமல் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமானால் அடுப்படி வாழ்விலிருந்து பெண்ணுக்கு விடுதலை கிடைத்தே ஆகவேண்டும். அடுப்புக்குள் கிடந்து வேகும் இந்த ஆற்றலின் அத்தியாவசிய தேவையை இந்த சமுகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதற்கு இப்படி ஒரு வழிமுறையைக் கையாண்டால் என்ன? ஒவ்வொரு ஊரிலும் மக்கள் தொகைக்கேற்ப உணவுச் சாலைகளை அமைக்கலாம். அங்கு மாற்றுமுறையில் (Shift) ஆண் - பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தலாம். இங்கு பெண்கள் உழைக்கும் போது அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். இவ்வாறான உணவுச்சாலைகளிலிருந்து அவ்வூர் மக்கள் தமது மூன்றுவேளை உணவை மட்டுமல்லாது, சிற்றுண்டி தேநீர் உட்பட சகல சாப்பாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்யலாம்,


ஒவ்வொருவரின் இரசனைக்கேற்ப உணவுகளைத் தயாரிக்கும் விதத்திலான படிப்பு, பயிற்சிகளை நடத்தலாம். இந்தச் சமையல்வேலை, ஒரு தொழிலாக வளர்ச்சியுறும் போது பலவித தொழிநுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஊட்டச்சத்துமிக்க உணவையும் தயாரித்தளிக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படும். நாளாந்தமோ, மாதாந்தமோ, பணத்தைச் செலுத்தி, விரும்பிய எந்த உணவையும் அந்த உணவுச்சாலைகளில் எவரும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சமையலறையோ அதற்குள்ளேயே பெண்கள் அகப்படுத்தப்படும் அவலமோ தொடரும் நிலை நிறுத்தப்படலாம்.

'இங்கும் திரும்பவும் பெண்கள் சமையலுக்குத்தானே' என்று சிலர் முணுமுணுக்கக்கூடும். இங்கு சமையல் ஒரு தொழிலாக, தொழிலுக்கேற்ற ஊதியத்தை பெறக் கூடியதாக உள்ள நிலைமையே உள்ளது. இதுநாள் வரை வீட்டுக்குள் இந்த உழைப்பு உழைப்பாகக் கருதப்படவில்லை. பெண்ணுக்கு விதிக்கப்பட்ட விதி என்று தான் சொல்லப்பட்டு வந்தது.

இந்த 'உணவுச்சாலைகள் அமைத்தல்' இந்தவிதியை மாற்றுவது மட்டுமல்லாமல் பெண்களின் ஆற்றலும் ஆளுமையும் வெளியுலகத்தில் பல்வேறு ஆக்கபூர்வமான துறைகளில் வெளிப்படுத்தப்படவும் காரணமாக அமையும்.

குறிப்பு:- உலகப் பெண்கள் நாள் மார்ச் 8 ஆகும். இம் மண்ணுக்கு புதிதாக தோன்றும் ஒரு கருத்தை இக்கட்டுரை சுருக்கமாக முன் வைத்துள்ளது. இக் கட்டுரை குறித்த கருத்துக்களை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். □

## ஓவியம் வாக்கியம்



இந்த ஓவியத்திற்கு பொருத்தமான கவிதை வரிகள் தாருங்கள்

# பாடசாலைகளில் கடல்வளம் சார் கல்வி

—ஏ. எஸ். ஆனந்தன்
(பகுதிநேர விரிவுரையாளர் - மீன்பிடி புவியியற்றுறை யாழ். பல்கலைக் கழகம்.)

மனிதன் பொருளாதார வளமுடையவனாகத் திகழ வேண்டுமாயின் தானே சுயமான ஒரு தொழிலைத் தேடிக் கொள்ள வேண்டியவனாகின்றான். இதற்குத் தொழில் பற்றிய அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியன அவசியமாகின்றன. இத்தகைய ஒரு நிலையை அனுபவரீதியாக வளர்க்கு முகமாகவே தொழில்நுட்பக்கல்வி கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு பொதுக் கலைத்திட்டத்தில் இயைபுபடுத்திக் கற்பிக்கப்படுகின்றது. இன்று தொழில் முன்னிலை பாட நெறிகளில் கடலக மீன்பிடி (Marine Fisheries) உள்நாட்டு மீன்பிடி (Inland Fisheries) ஆகிய இரு படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கலைத்திட்டத்தில் இப்பாட நெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் பாடசாலைகளில் இப் பாடத்தினைக் கற்பிப்பதற்கான எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரையில் எவராலும் முன்னெடுக்கப்படவில்லை. ஏனைய தொழில் முன்னிலைப் பாடத்திற்கென ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் கடல்வளம் சார் கல்விக்கான ஆசிரியர் நியமனங்கள் இன்றுவரை வழங்கப்படாமை இத்துறை கல்வி ரீதியாக எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது என்பதைக்காட்டுகின்றது. கடந்தவருடம் முன்வைக்கப்பட்ட ஆண்டு 9க்கான வாழ்க்கைத் திறன் கற்கையில் கூட கடல்வளம் புறக்கணிக்கப்பட்டது என்றும் இங்கு குறிப்பிடத்தக்கது. விவசாய பாட கற்கைகளில் அலங்கார மீன் வளர்ப்பும் கடற் தாவரமும் என்ற அலகு மட்டுமே சேர்க்கப்பட்டிருப்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஒரு பின்னணியில் 1993ஆம் ஆண்டு தொடக்கம் தமிழீழப் பகுதியில் உள்ள பாடசாலைகள் தோறும் கடல்வளம் சார் கல்வியைப் புகுத்துவதற்கான முயற்சிகள் முனைப்புடன் செயற்பட்டு வருவதை அறியக் கூடியதாயுள்ளது. இத்தகைய சிறந்த முயற்சியில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களின் ஆசியுடன் யாழ் பல்கலைக்கழக விலங்கியல் துறையினரும், தொண்டமானாறு வெளிக்கள நிலையமும், யாழ் கல்வித்திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் ஒன்றிணைந்து இத் துறை சார் நிபுணர்கள், அறிஞர்கள், ஆசிரியர்களின் உதவியுடன் இதற்கென ஒர கலைத் திட்டத்தினை பொதுக் கலைத்திட்டத்திற் கிசைவாகவும் எமது சூழலுக்குப் பொருத்தமானதாகவும் ஆக்கியுள்ளனர். அத்துடன் கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சி வகுப்புகள் மூலம் இப் பாட நெறியினைப் போதிடபதற்கான ஆசிரியர்களுக்கும், விஞ்ஞான, சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கும் முன்னோடி பயிற்சியினையும் வழங்கி வந்துள்ளமையும் இங்கு சிறப்பான நடவடிக்கையாகவுள்ளன.

கடல்வளம் சார் கல்வியானது ஆண்டு 4—5வரையில் ஆரம்பவிஞ்ஞான பாடத்திலும், ஆண்டு 6—9வரை சமூகக்கல்வி, விஞ்ஞானபாட பரப்பிலும் பொருத்தமான அலகுகளுடன் இணைத்து கற்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்துடன் ஆண்டு7—8வரை வாழ்க்கைத்திறன் கற்கைநெறிக்கான பாடத்திட்டமும் வடிவமைக்கப்பட்டு இதற்கான கைநூலும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 1995 ம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரத்தில் பொதுப் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு ஆண்டு 9, ஆண்டு 10, ஆண்டு 11 க்கான கடல்வளக்கல்வி பாடத்திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளன. 1993 இல் இக்கற்கை நெறியைப் போதிக்கும்போது எழுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் களையப்படுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடல்வளம் சார்கல்வி - நூல்சார்ந்ததும் செய்முறை சார்ந்த கல்வியையும் உள்ளடக்கியது. உயிரியல் விஞ்ஞானம், கடற்பொறியியல், கப்பல்கட்டல், கப்பல் ஓட்டம், மாலுமி சாஸ்திரம் கடல் ஆய்வுகள், படகுகட்டல், வலைத்தொழிற்சாலை, ஆழ்கடல் மீன்பிடி, ஐஸ் உற்பத்தி, துறைமுக விருத்தி, சந்தைப்படுத்தல், போக்குவரத்து திருத்தவேலைகள், கடலரிப்பு, கனிய வளம் தொடர்பான விஞ்ஞான. பொருளியல் சார்ந்த துறைகளைக் கொண்டிருப்பதினால் இத்துறை சார்ந்து பெருந்தொகையானவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரமுடியும் இத்துடன் நேரடியாக மீன்பிடித்தொழிலையும் மறைமுகமாக உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடவும் வாய்ப்புஏற்படும். யாழ்-பல்கலைக்கழகத்தில் அமையவிருக்கும் கடற்றொழில் பீடம் கடல்வளம் சார்கல்விக்கு மேலும் மெருகூட்டுவதாக அமையும்.

எனவே கடல்வளம் சார்கல்வி எம் சமூகமட்டத்தில் உள்ள தவறான எண்ணக்கருவையும், மனப்பாங்கையும் மாற்றிக்கொண்டு - மலரப்போகும் தமிழீழத்தின் மிகமுக்கியமான வளம், இதுமுழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டும் என்றநல்ல மனப்பாங்கை வளர்ப்பதாக அமையவேண்டும். இதற்கு இத்துறைசார்ந்த அறிவையும், திறனையும் வளர்த்துக்கொள்ள ஆசிரியர் சமூகம் வழிகாட்டவேண்டும். □

உங்கள் தோற்றத்திற்கு மேலும் அழகு சேர்க்கும் ஆடைவகைகள்!
விருப்பம் போல் தெரிவு செய்திட வீண் அலைச்சல் தேவை இல்லை

நேராக எம்மிடம் வாருங்கள்.

# பேள் ரெக்ஸ்

யாழ் வீதி, கிளிநொச்சி.

---

கிளிநொச்சி நகரில் உங்கள் அச்சுப்பதிப்பு வேலைகளுக்கு
அனுபவம் வாய்ந்தோர் நிறுவனம்.

சிறந்த முறையில் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து
தருகின்றோம்.

# றோயல் அச்சகம்

யாழ். வீதி, கிளிநொச்சி.

அலைகடலென ஆர்த்தெழுந்து, கொலைக்கருவிகள் ஏந்தி'
பகைவன் படையணி ஊருக்குள் நுழைய வரும்போதெல்லாம்-

மலையென அங்கு மறித்து நிற்பாயே!

ஓ.. கிட்டுமாமா இன்று நீ எங்கு சென்றாய்?

வானூர்திகள் வரும். வட்டமிடும்.

காற்றிடை சருகுகளென மக்கள்கூட்டம் சிதறியோடும்.

கடைகள், வீடுகளெல்லாம் கதவுகள் மூடும்.

நீ அங்கு வந்து சேர -

ஓடிய கால்கள் உடனே நிற்கும்

மூடிய கதவுகள் மீண்டும் திறக்கும்.

ஓ...... கிட்டுமாமா -

நீ என்ன குண்டுமழைக்கு குடையா கொண்டுவந்தாய்? ஏவுகணை யேதும் எடுத்து வந்தாயா? இல்லையே.. ?

ஆயினும் - இந்த அபார நம்பிக்கையை மக்கள் மனங்களில் எங்ஙனம் விதைத்தாய் ..

களங்களை வென்றே வேகத்திலேயே மக்கள் தம் மனங்களை வென்ற பே ...

சாளரத்தில் ஓர் கட்டுரை பிரசுரமாகி இருந்தது - மன்னார் அகதிகள் பற்றி.

அவர்களின் பொறுப்புணர்வற்ற தன்மையினை குறைகூறி அதில் எழுதப்பட்டிருந்தது.

எங்கோ ஓர் தொலைவிலிருந்து அதனைப் படித்து விட்டு இங்கோர் மடல் நீ அனுப்பியிருந்தாய். அந்த வரிகள் ஞாபகம் வருகிறது.

"...அக்கட்டுரையைப் படித்ததும் என் நெஞ்சு பொறுக்கவில்லை பிரச்சினைகளை எழுதலாம்; அதற்கான பரிகாரத்தை எழுதலாம்; பிழைகளை சுட்டிக் காட்டலாம். அதை விடுத்து திட்டுவது எப்படி சரியாகும். இதே சனத்திற்காகவும், அவர்களின் நல்வாழ்விற்காகவும்தான் நாம் போராடுகிறோம். அவர்களும் எம்முடைய சனங்கள் ....."

உனது வரிகளில் மெல்லியதோர் கோபம் இருந்தது.

ஓ ....கிட்டுமாமா

இந்த மக்களின் நினைவுகளைச் சுமந்து கொண்டுதான் அங்கேயும் நடமாடினாயா?

உன்னை இழந்ததால் உண்டான துயரச்சுமையை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு இங்கே உன் மக்கள் வாடுகின்றனரே நீ எங்கு போனாய் ...

நீ ஓர் சிந்தனாவாதி ! தீர்மானமாக - அவதானமாக - நுட்பமாக சிந்திப்பதில் நீ சிறந்தவன.

ஆம்.. ! ஆழ்கடலில் உன் கடைசிக் கணங்களில் கூட அப்படித்தான் சிந்தித்தாய்.

பகைவனிடம் பிடிபடக்கூடாது என்ற தீர்மானத்துடனும் கப்பல் ஊழியரை வெளியேற்றிய அவதானத்துடனும் - நீயும், உன் தோழர்களும், கப்பலும் சாம்பலாய் கடலில் கரையும் நுட்பத்துடனும் ......

ஓ.. கிட்டுமாமா

நீ வித்தியாசமானவன், விடுதலைக்கு வித்தாகிப் போனவன். மக்கள் மனங்களில் விருட்சமாய் விரிந்தவன்.



**களங்களை வென்ற வேகத்தில் மனங்களை வென்றாய்!**

மா நகர சபை யாழ்ப்பாணம்

# மாணவர்கள் தனிக்கல்வியுடன் ஒதுங்கிவிடக் கூடாது

—துணைவேந்தர்
துரைராஜா

● புத்தகங்களை மட்டுமே எந்நேரமும் படித்துக் கொண்டிருக்கும் சில மாணவர்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தனிக் கல்வியுடன் ஒதுங்கிவிடக்கூடாது. விளையாட்டு, சாரணியம், சமூகசேவை போன்றவற்றிலும் ஈடு பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் உடலில் புத்துணர்வும் உள்ளத்தில் சமூக விழிப்புணர்வும் உள்ளவர்களாக இருந்தால்தான் சமூகத்திற்கு உதவக்கூடியவர்களாக வாழலாம். இது அவர்களிற்கு தேசப்பற்றினை நன்கு வளர்க் கும். விளையாட்டுக்களில் ஏற்படும் வெற்றி தோல்விகள் வாழ்க்கையில் ஏற்படும் எத்தகைய வெற்றி தோல்விகளையும் எதிர் நோக்கும் மனப் பக்குவத்தை ஏற்படுத்துகிறது.

● இன்று உயர்கல்விகற்கும் மாணவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

எங்கள் காலத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் ரியூசன் (Tuition) எடுப்பது கண்டால், மற்றவர்கள் அவனை படிப்பில் குறைந்த மொக்கன் எனக்கேலி செய்வார்கள். ஆனால் இன்று ரியூசனுக்குப் போகாது விட்டால் வெட்கம் என்ற அளவிற்கு அது நாரிகமாகிவிட்டது. அரசாங்கம் தமிழ் மாண வர்களை தரப்படுத்தல்மூலம் குறைத்த காரணத் தால் மாணவர்கள் போட்டி மனப்பான்மையுடன் படித்துப் புள்ளிகள் பெறவேண்டியுள்ளது. இதற் காக இன்று ரியூசனை நாடவேண்டியுள்ளது.

● இன்று பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர் கள் பட்டம்பெற்று வெளியேறும்போது அவர் களின் மனப்பாங்கு எத்தகையதாகவுள்ளதென கருதுகிறீர்கள்?

இங்கு 2000 பேர்வரை படிக்கிறார்கள். 50 பேர் வரையிலானவர்கள் மட்டுமே சேவை மனப்பாங்கு உள்ளவர்களாக இருக்கின்றனர். எமது நாட்டைச் சேர்ந்த 1200 க்கு மேற்பட்ட வைத்தியர்கள் இங்கிலாந்திலுள்ளனர். அவர்கள் அங்கு வேலை செய்வதற்கு பல காரணங்கள் கூறுகின்றனர். அதேவேளை பிரான்ஸ்நாட்டு வைத்தியர்கள் இந்த நாட்டு மக்களுக்கு சேவை புரிகின்றனர். நான் கேம்பிரிச் பல்கலைக்கழகத்தில் அரசாங்கத்தின் (மக்களின்) செலவில் கல்விகற்றேன். அங்கு எனக்கு கூடியவருவாயுடன் வேலை கிடைத்த நேரத்தில் சுயநலம் கருதி நான் அங்கு நிற்கவில்லை. எமது மக்களுக்கு சேவை செய்வதற்காக உரிய நேரத் தில் திரும்பி வந்துவிட்டேன்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராஜா அவர்கள் யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி உயர்தர மாணவ மன்ற கையெழுத்துச் சஞ்சிகையான அரங்கம் (01- 04- 1992) இதழுக்கு அளித்த செவ்வியி லிருந்து சில பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளது. துணைவேந்தர் உடுப்பிட்டி அமெ. மிசன் கல் லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப் பிடத்தக்கது.




● இளங்கவிஞன் வேலணையூர் சுரேஷ் எழுதிய களத்தீ கவிதைத் தொகுதி வெளியாகியுள்ளது. போராட்ட உணர்வுகளும், எழுச்சி கோசங்களும் கவிதைகளாகப் பதிவாகியுள்ளன. 40 கவிதை களைத்தாங்கி இத்தொகுதி வெளிவந்துள்ளது. இதன் விலை 30 ரூபா

● கவிஞர் வாகரை வாணன் எழுதிய ஆசிரியன் ஓர் அட்சய பாத்திரம் எனும் கவிதைத் தொகுதி யொன்று சிறீகாந்தா புத்தகசாலை வெளியீடாக வந்துள்ளது. ஆசிரியன் நேற்று - இன்று - நாளை Vocation-Notan-Avocation; ஆசிரியன் ஓர் அட்சய பாத்திரம்; பாரதி வாழ்வில் சில பக்கங்கள்; வித் தகர் விபுலானந்தர் வாழ்க்கைச்சித்திரம்; ஓடம் ஒருநாள் ஓடும் ஆகிய தலைப்புகளில் 29 பக்கங் களில் தொகுதிவெளியாகியுள்ளது. விலை 20 ரூபா

● பரதநாட்டியம் (அடிப்படை அறிவும், ஆரம்ப விளக்கமும்) தென்மராட்சியைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் (பரதநாட்டியம்) திருமதி யசோதரா விவேகானந்தன் எழுதிய இந்நூல் கமலாவதி பிர சுரமாக வெளிவந்துள்ளது.

காலஞ்சென்ற தனது துணைவியாரது முதலாம் ஆண்டு நினைவாக திரு கு. பரராஜசேகரம் இந் நூலை பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

# அச்சமூட்டும் அளவில் மீண்டும் மலேரியா பரவுகிறது!

—பாலகுமாரன்

தமிழ் ஈழத்தில் மட்டுமல்ல உலகெங்கும் மலேரியா மீண்டும் வேகமாக பரவி வருகின்றது. இங்கு அரசின் அடக்குமுறை காரணம். வேறிடங்களில் உலகத்தின் அக்கறையின்மை காரணம். 1955ம் ஆண்டளவில் ஐந்தாண்டு மலேரியா ஒழிப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்திய உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) உலகத்திலிருந்தே மலேரியா ஒழித்துக் கட்டப்பட முடியும் என்றது. ஆனால் இன்றோ மீண்டும் மலேரியா அச்சமூட்டும் அளவிற்கு பரவுகின்றது. எல்லாத் தடைகளையும் மீறி உயிர்கொல்லி மலேரியா கிருமிகளை அனோபிலிஸ் (Anopheles gamiae) அனாயாசமாக காவிச்சென்று பரப்புகின்றது. வருடாந்தம் 20 இலட்சம் பேர் மாளுகின்றனர். (எயிட்ஸ் தாக்கி மாளுவோரைவிட மிகவதிகமாக) மொத்தம் 27கோடி மக்கள் வருடாந்தம் பாதிப்படைய ஆபிரிக்காவில் மட்டும் வருடாந்தம் 9½ கோடி மக்கள் மலேரியாவால் தாக்கப்படுகின்றனர். தெற்கு, தென்கிழக்காசியா, தென்னாபிரிக்கா ஏனைய பாதிக்கப்பட்ட பகுதிகள். இப்போது 1950 இல் இருந்ததைவிட நிலை மோசமாக உள்ளதாக உலக சுகாதார தாபனம் கவலைப்படுகின்றது.

இதற்கு பிரதான காரணம் மலேரியாநோய் தடை மருந்துகள் தமது வீரியத்தை இழந்தவண்ணம் இருப்பதும் இத்தடை மருந்துகள் எதிர்க்கும் ஆற்றலை அனோபியஸ் பெறுவதும் புதிய ஆய்வுகள் இத்துறையில் மேற்கொள்ளப்படாததும் தான். ஏனென்றால் மலேரியா இன்று நேற்று வந்ததல்ல. மிகப் புராதனமான நோய். 10 இலட்சம் ஆண்டுகட்கு முன் தென்கிழக்காசியாவிலே முதலில் தோன்றிய நோய். கோமோ இரெக்டஸ் (Homo Erectus) எனப்படும் வளர்நிலை மனிதனையே தாக்கியநோய் பின்னர் ஆபிரிக்கா, ஐரோப்பா எனப்பரவி கொலம்பஸின் கடற்பயணங்களால் தென்னாபிரிக்க நாடுகளிலும் கால் வைத்த நோய் 19 ம் நூற்றாண்டுவரை இருந்த மலேரியா நோய்க் கிருமிகளும் அதற்கும் நுளம்புகட்குமுள்ள தொடர்பும் 1880 ம் ஆண்டளவில் பிரஞ்சு வைத்தியரான சார்ல்ஸ் லபெரன் என்பவரின் ஆய்வின் பின்னரே காணப்பட்டன. இற்றைவரை நான்குவகை மலேரியா நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பொதுவாக உள்ளது, பிளாஸ்மோடியம் வைவக்ஸ் (P'asmodium vivax) மிகக் கொடியதாக கருதப்படுவது பிளாஸ்மோடியம் பல்ஸிபரம் (Plosmodinm Falci Parum) மெல்லிய நூல் வடிவிலே உடம்பில் உட்புகும் இக்கிருமி பல்கிப் பெருகிசெங்குருதிக் கலங்களை சிதறப்பண்ணி பெரும் நாசத்தை விளைவிக்கிறது.

மலேரியா நோய்க்கு குணமாக்கி மருந்தான 'குவினைன்' முதலில் தென்னாபிரிக்காவிற்கு மதம்பரப்பச் சென்ற ஐரோப்பிய மிசனரிமாரால் சிங்கோனா மரப் பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்டது. பின்னர் அமெரிக்க இராணுவத்துறை தனதுபோர்வீரர் தேவைகருதி குளோரேக்குயின் (Cholorguine) எனப்படும் மலிவான நீண்டகாலப் பயன்பாடு உடைய மருந்தினைக் கண்டறிந்தது. இதைவிட இன்று (Mefloguine, Halofantrine Fansidan) எனப்படும் மருந்துகளும் கண்டறியப் பட்டுள்ளன.

இன்றுள்ள சிக்கல் குவினைன் மருந்து ஏறத்தாழ தனது செயல் வலிமையை இழந்து விட்டது. ஏனையனவும் படிப்படியாக தமது வலிமையை இழந்து வருகின்றன. மேலும் 1950 ஆண்டளவிலிருந்து பெருமளவு DDT கிருமிநாசினியே நுளம்புகளை அழிக்க பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. சேற்றுநிலங்கள், குட்டைகள், நீர்த்தேக்கங்கள், வதிவிடங்கள் எங்கும் இதைத் தெளிப்பதின் மூலம் பெரும் பலன் கிட்டிற்று. ஆனால் இதன் பக்கவிளைவுகள் மிக தீங்கானவை இயற்கைச் சமநிலை பெரிதும் பாதிக்கப்படுவதாக நல்லன செய்யும் உயிரினங்கள் பல அழிவதாக பெரும் எதிர்ப்புக் குரல் சூழல் காப்பாளர்களால் எழுப்பப்பட்டதால் DDT பாவனை இப்போது முற்றாக தடைப்பட்டுவிட்டது. அத்தோடு இக் கிருமிநாசினியை எதிர்க்கும் திறனை அனோபிலிஸ் பெற்று விட்டது.

எனவே மீண்டும் மூர்க்கத்துடனும் அச்சமூட்டும் வகையிலும் மலேரியா பரவி வருகின்றது. இதனை தடுக்க புதிய ஆய்வுகள் மூலம் சிராக்கிய குணமாக்கிகள் காணப்பட வேண்டியது மிக அவசியமாகின்றது. ஆனால் பாரிய மருந்தக நிறுவனங்கள் தமக்கு இலாபமின்மையை கருதி இத் துறையில் புதிய ஆய்வுகளை ஊக்குவிக்காது புறக்கணித்துவிட்டன. ஏனெனில் வர்த்தக நோக்கில் பெருமளவு நிதியை செலவழித்து அதனால் கண்டறியப்படும் மருந்துகளை மூன்றாம் உலக நாடுகளில் காடுகளில், சேற்றுசதுப்பு நிலங்களில், சுரங்கங்களில், மரம் வெட்டும் தொழிலில், புதிதாக காடுகளை அகற்றி வதிவிடங்கள் அமைக்கும் நிலை

(24ஆம் பக்கம் பார்க்க)

# உளவியல் உலகம்

வசியன்

1856ம் ஆண்டு வைகாசித்திங்கள் 6ம் நாள் செக்சோசிலவாக்கியா நாட்டிலுள்ள மொறாவியாவில் பிறந்தவர் சிக்மண்ட் பிராய்ட். எட்டுப்பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் மூத்த பிள்ளையாக திகழ்ந்தார். இவரின் அறிவுத்திறமையைக் கண்ட தந்தை இவரின் கல்வியில அக்கறை காட்டி ஊக்க மூட்டினார். பாடசாலையில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தாலும் அடிக்கடி மனச்சோர்வுக்கும் உணர்ச்சிக் குழப்பங்களுக்கும் ஆளானார். 1873ல வியன்னாவில் உள்ள பிரசித்தி பெற்ற மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்றார். ஒருவருடமாக ஜாண்சாசகோ என்பவரின் கீழ் மனோவசிய சிகிச்சை முறைகளை கற்றார். பின்னர் யோசவ் புரூவரின் ஹிஸ்ரீறியா - நரம்புத்தளர்ச்சி நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் முறைகளில் ஈடுபட்டு பினனர் இவர்களின் சிகிச்சை முறைகள் திருப்தியளிக்காமையால் உளப்பகுப்பு ஆய்வு முறையை உலகிற்கு அறிமுகம் செய்து உளவியலில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார் நனவிலி மனத்தை அகழ்ந்து உளநோய்களுக்குரிய காரணங்களைக் கண்டு பிடித்து சிகிச்சை அளிக்கும் முறையே உளப்பகுப்பாய்வாகும். பிணியாளரின் ஆழ் மனத்தில் அடக்கி வைக்கப்பட்ட தீவிர உணர்வுகளை வெளிக் கொணர்தல், அம்முயற்சியில் மனநல மருத்துவர் ஈடுபடும் போது பிணியாளரிடம் தோன்றும் எதிர்ப்பு மனப்பான்மையையும் உணர்ச்சிப்பெயர்வையும் சமாளித்தல் இறுதியில் உளவியல் ரீதியான விளக்கம் தருதல் முதலியன உளப்பகுப்பாய்வு மருத்துவத்தின் அடிப்படையாக அமைகின்றன.

பிணியாளரும் உளநல மருத்துவரும் தனி அறை ஒன்றில் எவ்வித குறுக்கீடும் இன்றி தனித்திருப்பர். பிணியாளர் சாய்வு நாற்காலியில் அல்லது படுக்கையில் சரிந்து அமர்ந்திருப்பர். நோயாளி இந் நிலையில் மனநல மருத்துவரின் முகத்தை பார்க்க முடியாது. ஆனால் நோயாளியின் முகபாவங்களை மனநல மருத்துவர் கவனிக்க வாய்ப்புகள் உண்டு.

மனநல மருத்துவர் நோயாளி தன்னை எத்தடையுமின்றி வெளிப்படுத்த வாய்ப்புகளை உருவாக்குவார் ஊக்கப்படுத்துவார். இதனை சுதந்திரமாக தொடர்பாக்கல் free association என்று சொல்வர். இவ்வாறு நோயாளி தன்னுடைய அழ் மனத்தில் புதைந்துள்ள கசப்பான எண்ணங்களையும அனுபவங்களையும் வெளிப்படுத்துவார். ஆழ் மனத்தில புதைந்துள்ள தீவிர உணர்வுகள், நோக்கங்கள், கற்பனைகள், தேவைகள், ஏமாற்றங்கள், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் மூன்று வழிகளில் மனநல மருத்துவர் வெளிக் கொணருகின்றார். அவை, சுதந்திரத் தொடர்பாக்கல், உணர்ச்சிப்பெயர்வு, கனவுகள் ஆகும்.

மனநல மருத்துவர் இவற்றையெல்லாம் கண்டு கொண்ட பின் பிணியாளரின் செயல்களுக்கும் அவருடைய எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் அவரை ஆட்கொண்டிருக்கும் நோய்களுக்கும் இடையே உள்ள தொடர்பை தெளிவாக விளக்கி பிணியாளி உணரும் படி செய்வார். இங்ஙனம் பிணியாளியின் தன்னுணர்வு வலுப்பட்டு ஆளுமையின் குறைகளை நீக்கி தான் மேற்கொண்டுள்ள உள பாதுகாப்புக் கவசங்களை அகற்றி தன்னை சீரமைத்துக் கொள்வார்.

இத்தகைய மருத்துவமானது வாரத்தில் பலதடவை நடைபெறும். சிகிச்சை முறையானது மூன்று அல்லது ஐந்து வருடங்கள் நீடிக்கலாம். இச் சிகிச்சை முறையானது பொருளுள்ளது பொருள் செலவுமிக்கது. அமெரிக்கா போன்ற நாடுகளில் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது. ஆனால், நம்பிரதேசத்தில் சிறிது அறிமுகம் செய்யப்பட்டு வருகிறது ☐

## அச்சமூட்டும் அளவில்...

(23ம் பக்க தொடர்ச்சி)

யாக உள்ள ஏழைகளுக்கு விற்று பணம் சம்பாதிக்க முடியாது என்பது இவர்கள் எண்ணம். மலேரியா நோய்த்தடை மருந்துகள் ஆய்விலே உலகிலே முன்னணியில் திகழ்ந்த அமெரிக்க இராணுவ மருத்துவத் துறைபோ தற்போது இத் துறையில நாட்டத்தை இழந்து விட்டது. எனவே எக்காலத்திலும எவரும் பொது நன்மை கருதி மலேரியாவுக்கு மாற்று மருந்து காணமுடியவில்லை என்பது கசப்பான உண்மையாம. ஏனென்றால் குவினைன் மருந்து ஏகாதிபத்திய வாதிகட்கு மூன்றாம் உலக நாடுகளை அடிமைப் படுத்தும் இராணுவத் தேவைக்காக குளோறோக்குவினை அமெரிக்கா இராணுவ ஆக்கிரமிப்பிற்கு பயன்படுத்தியது. ஆனால் இன்று சாம்ராச் சியங்களும் இல்லை. குடியேற்றநாடுகளும் இல்லை. எனவே மலேரியாவுக்கு புதிய மருந்துகள் காண மேற்தலகுக்கு மனிதநேய அடிப்படையில் அக்கறையுமில்லை. (எனினும் உலக சுகாதார தாபனம் ரசாயனவியல் ஆய்வாளர்களும் சில தனி ஆய்வுளில ஈடுபட்டுள்ளனர்) இதன் பயன் தற்போதைய நிலையில் ஏறத்தாழ 210 கோடி மக்கள் (2.1 billion) - உலக மக்கள் தொகையில 40% மலேரியா நோயால் தாக்கப்படக்கூடிய ஆபத்திலிருககின்றார்கள் என்பதே. ☐

# அரும்புகள்

## சரணாலயம்

என்னுயிரே !
நீ மட்டும்
அன்று ........
என்னருகில் இல்லையென்றால்,
என்னுயிரே ........

அந்த
அந்தகார இருளில்.........
அநாதையாய் — நான்
அந்தரித்த போது,
அரணாக — நீ மட்டும்
என்னருகில் இல்லையென்றால் .........

அந்த அகோர வேளையில்
வெட்ட வெளியில்
நெட்ட நெடுகாய் — நீ
என்னருகில் இல்லையென்றால் ........

அந்த
ஓலச் சூழலில்
ஒதுங்க மட்டும் — நீ
என்னருகில் இல்லையென்றால் .........

அந்த
குருதிப் படிவுகளின் மத்தியில்
உறுதியாய்,
நீ மட்டும்
என்னருகில் இல்லையென்றால் .........

என் – உயிரை
மெல்லென எடுக்க
'ஷெல்'கள் தேடிய போது,
உனை வருத்தி
எனைக் காத்த — நீ மட்டும்
அன்று — என்னருகில்
இல்லையென்றால் ........

இனிய பனையே,
அன்று
நீ மட்டும் —
என்னருகில் இல்லையென்றால்,
என்னுயிரே .........

— க. ரட்ணேஷ்
மானிப்பாய் மெமோறியல் ஆ. பா.

## சுடரச் சுடரும்....

தீக்குளித்துச்
சுடர்கின்ற பொன் போல .........
நாங்கள்
தீக்குளித்து தீ மிதித்து
தீரத்தில்
தலை நிமிர்ந்தோம்!

## சூரிய விருட்சம்

இருட்டு எம்மை
ஏப்பமிட்டதால் — இன்று
இருண்டே நடுங்குகிறது .........
ஏனென்றால்,
இருட்டு வயிற்றுக்குள்
முளைத்த ஒரு பொறி
சூரிய விருட்சமாய்
சுடர்விடத்
தொடங்கியதால் ! !

— த. மறவன்

● ●

## வீரத்தாய்

பறந்த பட்சிகள் அமர்ந்திடவும் – இந்த
படர்ந்த வனத்தில் இடமில்லையோ?
பிறந்த மண்ணில் எரிவதற்கும் – உயிர்
பிரிந்த பின்னரும் வரமில்லையோ?

எல்லைத் தமிழ்மண் எரிகையிலே – மகனே
எலும்பைச் சுமந்து நீ நடப்பாயோ?
செல்வத் தமிழினம் அழுகையிலே – விலை
இல்லா உயிரையும் நினைப்பாயோ?

பாலை ஊட்டிடும் போதே – உனைப்
பார்த்துச் சொன்னதை மறப்பாயோ?
தலை ஆட்டியே நீயும் – அதை
தீர்ப்பேன் என்பதை மறைப்பாயோ?

காளையாய் பெற்றுள்ளேன் உன்னை – இனியும்
கோழையாய் திண்ணையில கிடப்பாயோ?
நாளைக்கு என்றது போதும் – இந்த
நொடிப்பொழுதில் எழுந்து நீ நடப்பாயோ?

கொடியோன் குடலினை கிழித்து – எல்லைத்
தடியினில் இழுத்து நீ கட்டு!
மடிந்திடில் வந்திடுமா வீரனாய் –மலர்
மாலைகள் சூடிபஞ்சலிப்பேன்; நான் வீரத் தாய்!

— வேலணையூர் சுரேஷ்

- ஆடவர், நங்கையர், சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் ஏற்ற நவ நாகரிகமான ஆடைவகைகள்!
- தைக்கப்பட்ட குழந்தைகளுக்கான உடைவகைகள்! அழகிய துணிமணிகள்!
- அனைத்திற்கும் கிளிநொச்சியில் நீங்கள் நாடவேண்டிய இடம் —

# லக்கி ஸ்ரோர்

யாழ் வீதி, கிளிநொச்சி.

---

## அன்பளிப்புப் பொருட்களை இங்கே பெறுங்கள்!

- அழகு சாதனப் பொருட்கள்
- எவர் சில்வர் பொருட்கள்
- அல்பங்கள்
- இன்னும் அநேகப் பொருட்கள்

அன்பளிப்பின் மூலம் உங்கள் நண்பர்கள், உறவினர்கள் மனங்களின் நீங்காத இடத்தினைப் பெறுவீர்கள்.

# உதயன் சொப்பிங் சென்ரர்

யாழ். வீதி, கிளிநொச்சி.

தெறிப்பு

## நன்றிகள்

'சாளரம்' இளையோர் திங்களிதழால் கடந்த 29 . 01 . 93 இல் புனித சார்ள்ஸ் ம . வி பாடசாலையில் நடாத்தப்பட்ட 'சிறுகதை எழுதல்' பற்றிய கருத்துரை கலந்துரையாடலில் கலந்து கொண்டு பயன் பெற்றோம். அன்றைய அந்தப் பொழுது ஒரு இனிய, பயனுள்ள பொழுதாக கழிந்தது என்று தான் கூற வேண்டும். ஆனாலும் அக் கருத்துரை ஒரு நாளுடன் நின்று விட்டதே என்பது தான் எமது கவலை. இது போன்ற கருத்துரைகளை 'சாளரம்' வாரம் ஒரு தடவை நடத்த முன்வரலாமே. இப்படியான சந்திப்புக்கள். நிச்சயம் எழுத முயல்வோருக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும். சந்தேகங்கள் பலவற்றை தீர்க்க உதவும். எமது எதிர் பார்ப்பு இவை தான். இதுபோன்ற நிகழ்வினை தொடர்ந்து நடத்துவது பற்றியதாக சாளரத்தின் அடுத்த அறிவிப்பு இருக்குமா?

இக் கருத்துரை நிகழ்வினை வைத்து எம் போன்றவர்களை ஊக்குவித்தமைக்காக சாளரத்துக்கும்.அதன் நிர்வாகத்திற்கும் எம் .........

நன்றிகள், பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

சாளரமே! நீ இன்னும் பல கலை சார் துறைகளுக்கும் இது போன்ற கருத்துரைகளை நடாத்த உத்தேசித்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதே; அவ் உத்தேசம் நடைமுறையாக வந்தால் எம் மகிழ்ச்சி எத்தகையது என்பதை நினைக்கவே முடியவில்லை.

சாளரம் தனது 8 வது இதழில் கூறியதை இப் பொழுது நடைமுறைப்படுத்தியுள்ளது.

சாளரத்தின் அன்பு வாசகர்கள்.
கி . செல்மர் எமில்
தி . ஸ்ரீசபேசன்
ஏ . அலெக்ஸ்ரன்

## சாளரம் முதலாம் ஆண்டு இதழ்களின் தொகுப்பு

சாளரம் முதலாம் ஆண்டு இதழ்களின் தொகுப்பு ( யூன் 1991 — யூலை 1992 ) வெளியாகியுள்ளது. குறிப்பிட்ட தொகையே கையிருப்பில் உள்ளதால் தொகுப்பு தேவைப்படுவோர் எம்முடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

## ஆர்வத்துடன் படித்து வருகிறேன்

இளையோர் திங்கள் இதழாக எங்கள் கைகளில் தவழும் சாளரம் என்ற இவ்விதழை மிகவும் ஆர்வத்துடன் படித்து வருகின்றேன் சமுகத்தில் விழிப்பு உணர்வு ஏற்படுத்தும் மேலான நோக்கம் கொண்டும் பாடசாலை மாணவ மாணவிகளுக்கும் சென்றடையக் கூடிய விதத்தில் வெளிநாட்டுப் பிரச்சினைகள் பல உண்மைச் சம்பவங்களை தரமான முறையில் தொகுத்து அனுப்பும் சாளரம் ஆசிரியரை நான் பாராட்டுகிறேன். சாளரத்தின் முதலாம் ஆண்டு தொகுப்பை நான் ஆவணமாக்கிக் கொள்வதற்கு ஆவலோடு இருக்கிறேன்.

கை . வதனன்
உடையார்கட்டு, முல்லைத்தீவு.

## இன்னும் பல விடயங்கள் பிரசுரித்தால் என்ன?

பலதரப்பட்ட சுவையான உண்மைச் சம்பவங்களைத் தாங்கிவரும் இளையோர் திங்களாகிய சாளரம் ஆசிரியரை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இவ் இதழை ஒன்று விடாது தொடர்ச்சியாக வாசித்து வரும் ரசிகர்களில் நானும் ஒருவன்.ஒரு இதழை வாசித்து முடிக்கும் போது இன்னும் பல விடயங்கள் பிரசுரித்தால் என்ன என்ற உணர்வு தோன்றுகிறது. ஆகையால் இன்னும் கொஞ்சம் பெரிதாக வருமா என்று நான் எதிர்பார்க்கிறேன்.


— கவி
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

## சாளரம் தொடர்ந்து வரவேண்டும்

நீங்கள் வெளியிடும் சாளரம் பத்திரிகையின் படைப்புக்கள் அனைத்தும் தரமானவை. அத்துடன் சமூகக்கல்வி, தமிழ் போன்ற பாடங்களுக்கு கைகொடுக்கும் உற்ற நண்பனாக திகழ்கின்றது 'சாளரம்'. 'தனியார்கல்வி நிறுவனம்' போன்ற கட்டுரை மிகவும் வியக்கவல்லவை. அப்படியான கட்டுரை தொடர்ந்து வெளியிட வேண்டும் என வேண்டுகிறேன். மாணவர்களுக்கு சாளரம் ஒருகிடைத்தற்கரிய வரப்பிரசாதம். இப்பத்திரிகை தொடர்ந்தும் வெளிவரவேண்டும் எனவும் மாணவர்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்க வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

—சா. சாந்தி

# ஓவியம் வாக்கியம் பதில்



ஓர் உலக அதிசயம்!
யாழ் நூல் நிலையம்.
அது,
எரிக்கப்பட்டதும்
கூடத்தான்.

கல்விக் கடலின்
'கலங்கரை விளக்கம்'
கண்ணீர் விட்டது.

அறிவின் வளம்
அறிவாலயம்
அழிக்கப்பட்டது.

சிந்தனையை சீராக்கும்
சீரிய சிகரம்
வஞ்சனை நோக்குடன்
சிதைக்கப்பட்டது.

எம் தேச வரலாறு
எல்லாம் — அங்கு
தேங்கி இருந்ததால் தானோ

எதிரியின் ஏவல்கள்
எரித்தன அதனை

படித்த முட்டாள்களின்
பாதகம் தான் — இந்த
பகைமைப் படலம்.

ஒன்று செய்வோம்
இனிவரும் காலங்களின்
முட்டாள் தினத்தில் — தீ
மூட்டியவரை
நினைவுகூருவோம்.

க. ரட்ணேஸ்
மானிப்பாய் மெமோறியல் ஆங்கில
பாடசாலை

**கிளிநொச்சி மக்களின் நல்ல நண்பன்**
**விவசாயிகளின் உற்ற துணைவன்!**

- நினைவை விட்டு நீங்காத படங்கள், ஓவியங்களை அழகாக பிறேம் செய்து தருபவர்கள்!
- அமோக விளைச்சலைத்தரும் உரவகைகள், களைநாசினி, கிருமிநாசினிகளின் சில்லறை, மொத்த விற்பனையாளர்கள்!

**ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**

**யாழ் வீதி, கிளிநொச்சி.**

**கிளிநொச்சி விவசாயிகளுக்கு**

**அன்றும் இனி என்றென்றும்**

**தோள் கொடுக்கும் தோழன்!**

ஆர்தன்ஸ்

தரத்தை தரமானவர்களிடமே
பெறமுடியும்

* உத்தரவு பெற்ற இலங்கை
உரக்கூட்டுத்தாபன முகவர்கள்

* உத்தரவு பெற்ற இலங்கைப்
பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவர்கள்

எல்லாப் பொருட்களினதும் ஏக விநியோகஸ்தர்கள்

# ஆர்தன்ஸ்

யாழ் வீதி, கிளிநொச்சி.

செந்நெல் வயல்கள் செழித்தோங்கும்
கிளிநொச்சி நகரில்-

அந்நெல் மணிகளை தரமான-சுவையான
அரிசியாக்கித் தந்திடும் ஆற்றல் மிகு
அரிசி ஆலை!

வேல்முருகன் அரிசி ஆலை

உங்கள் தேவைகளுக்கு
வேறு எங்கும் நீங்கள்
செல்லத் தேவையில்லை.

நாடுங்கள்

வேல்முருகன் அரிசி ஆலை

யாழ் வீதி, கிளிநொச்சி